MASIVAN : JOURNAL OF LANGUAGE AND LITERATURE STUDIES
To Discern the Truth is Wisdom– Half yearly Journal
Vol.3: Issue.2, July 2026
ISSN : 3048-7854

Editor
Dr R.Manimekalai

Vol.3: Issue.2, July 2026

ISSN : 3048-7854

MASIVAN : JOURNAL OF LANGUAGE AND LITERATURE STUDIES

To Discern the Truth is Wisdom– Half yearly Journal

Editor-in-Chief

Dr. R.Manimegalai
Associate Professor & Head
Department of Tamil
PSGR Krishnammal College for Women
Coimbatore – 641004
Ph: +919894439821, E-Mail : manimekalair@psgrkcw.ac.in

Associate –Editors

Dr. V.Meenakshi
Assistant Professor
Department of Tamil
Bishop Heber College
Tiruchirappalli – 620017
Ph: +919790382356,
E-Mail : meenakshi.tm@bhc.edu.in

Dr A.Manonmani Devi
Assistant Professor
Department of Languages and Communication
Sultan Idris Education University
Tanjong Malim – 39500, Perak, Malaysia
Ph: +60164722944
E-Mail : manonmanidevi@fbk.upsi.edu.my

Mr. S.Chandrakumar
B.A. Hons, (EUSL), M.A (EUSL), M.Phil (EUSL),
PGDE (OUSL)
Senior Lecturer - Gr I
Department of Fine Arts
Faculty of Arts & Culture
Eastern University, Sri Lanka
Ph: +9477 666 1495
E-Mail : chandrakumars@esn.ac.lk

Dr. N. Gayathri
Associate Professor
Department of Tamil
PSGR Krishnammal College for Women
Coimbatore – 641004
Ph: +919486331167,
E-Mail : ngayathri@psgrkcw.ac.in

Dr C.Nandhini Devi
Assistant Professor
Department of English
National College
Tiruchirappalli - 620001
Ph: +919894211698
E-Mail : nandhinidevi@nct.ac.in

Masivan Pathippagam,
3/199, A.Gudalur, Ayandur Post, Kandachipuram TK, Villupuram – 605755
+919486069548, editor@masivan.in

© Copyright to MASIVAN: JOURNAL OF MULTIDISCIPLINARY STUDIES 2026 • All Rights Reserved •

Index

S.No	Title & Author	Pages
1	Mudhuvas Thozhil Nilaigal **Anjali.B, Jamuna.S**	01
2	Medicinal Perspectives on the Flowers Mentioned by Tolkappiyar **Karthickeyan.A, Manimegalai.R**	08
3	Therukoothu Traditions of the Kallakurichi Region **Pradeepa.T, Jothimani R**	15
4	The Lifestyle Values of the Mullu Kurumba Tribal People **Prashila.S**	23
5	Kurinjith Thinaiyil Unavumuraigal **Premkumar.R**	29
6	Religious rituals of the people of Bachalur **Senthil Kumar.R, Manimegalai.R**	35
7	A Study on Tolkappiya Ceyyuliyal Principles in Alagar Killaividu Thoodu **Sivabalan.M**	42
8	The Ideal of Chastity in Sangam Literature **Sundaramoorthy.G**	49
9	The Psychological Dimensions of Meerasadhu Novel **Susmitha.K, Bhuvaneswari.C**	54
10	Principles of Aesthetics in Kaninividu thothu **Varalakshmi.R**	63

1

முதுவர் தொழில் நிலைகள்

Mudhuvas Thozhil Nilaigal

அஞ்சலி.பா, ஜமுனா.செ, தமிழ்த் துறை, என்.ஜி.எம்.கல்லூரி, பொள்ளாச்சி.

Anjali.B, Jamuna.S

Department of Tamil, NGM College, Pollachi.

DOI: 10.5281/zenodo.21735555

Abstract

In the early days, agriculture was practiced entirely using natural methods. The excellence of farming fostered the growth of various allied occupations and led to surplus production; specific roles and corresponding tools were clearly defined for each task. Farmers employed a cultivation technique wherein the soil was tilled and allowed to dry until it reached a specific, fine consistency—a method that ensured crops flourished without the need for even a handful of manure. Beyond agriculture, these communities also engaged in group hunting. They were free from caste-based divisions, living as equals without social hierarchies, and met their needs within the forest itself. Today, however, their occupations have undergone significant changes due to the advancement of civilization and the various concessions provided by the government. The objective of this study is to examine their occupational status in the early days and the transformations that have occurred since then.

ஆய்வுச் சுருக்கம்

ஆரம்ப காலங்களில் இயற்கை வேளாண்மைதான் முழுமையாக காணப்பட்டது. உழவு சிறந்ததாலேயே அதன் சார்புடைய இதர வகையான பல்தொழில்களும் வளர்ச்சி கண்டன. உபரி உற்பத்தியும் பெறுகின. அவரவர்க்குரிய தொழிலும் அதற்குரிய கருவியும் தனித்தனியே வகுக்கப்பட்டிருந்தன. ஒரு நிலத்தை உழுதவன் ஒருபலம் புழுதி, கால் பலம் புழுதி ஆகுமாறு அதைக் காய விட்டால்,அதன் பின் அதில் உண்டாகிய பயிர் ஒரு பிடி எருவும் இடத் தேவையில்லாமல் செழித்து விளையும் என்ற விவசாய நிலத்தை பாதுகாத்து பயிர் செய்யும் முறையை கையாளுவதையும் செயல் முறை படுத்தினான், விவசாயம் மட்டுமன்றி குழுவாகச் சென்று வேட்டையாடுதலே இம்மக்களின் முறையாக இருந்தது. இவர்களுக்கு வகுப்புவாதப் பிரிவினைகள் கிடையாது. அனைவரும் ஏற்றத்தாழ்வின்றி சமமாகக் கருதி வாழந்தனர். தேவைகளை காட்டிற்குள்ளேயே தீர்த்துக் கொண்டனர். தற்பொழுது நாகரீக வளர்ச்சி காரணமாகவும் அரசு அவர்களுக்கு பல்வேறு சலுகைகள் வழங்கிய காரணத்தினாலும் அவர்கள் தொழில்களில் பல்வேறு மாற்றங்களை பெற்றுள்ளனர். ஆரம்ப காலத்தில் இவர்களின் தொழில் நிலை தற்பொழுது இவர்களின் தொழில் மாற்றமும் குறித்து ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

KeyWords: *Muthuvas, Valparai, Pollachi, Folklore, Tamil*

முன்னுரை

பழங்குடி மக்கள் திணைகளுக்கு ஏற்ப இயற்கையோடு இயைந்த வாழ்வியலை

மேற்கொண்டனர். அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் இன்றி எளிய கருவிகளைக் கொண்டு உலகளாவிய வணிகத்தை நிலைநிறுத்திய இவர்களின் தொழில்கள் போற்றத்தக்கன. பண்டைய தமிழகத்தில் மக்கள் வாழ்ந்த ஐவகை நிலங்களின் அடிப்படையில் தொழில்கள் பிரிக்கப்பட்டன. குறிஞ்சி நிலம் மலைப்பகுதி மலைப்பகுதிகளில் தேன் எடுத்தல்இ கிழங்கு அகழ்தல் மற்றும் வேட்டையாடுதல் ஆகியவை பழங்காலத்தில் முக்கிய தொழிலாக இருந்தது. அதன் பின்பே விவசாயம் செய்ய துவங்கினர் அவையும் இயற்க்கை விவசாயமாகவே காணப்பட்டது. இவ்வாறாக முதுவர்களின் ஆரம்ப கால தொழில் மற்றும் தற்போதைய தொழில்கள் குறித்தும் இக்கட்டுரையில் விளக்கப்படவுள்ளது.

முதுவர் தொழில்கள்

பழங்குடி மக்கள் ஆரம்ப காலத்தில் அதிகமாக இடம்பெயரும் வேளாண்மை(Shifing Cultivation) முறைகளைத் தான் கையாண்டு வந்தனர். இத்தகைய முறையானது இந்தியாவில் மட்டுமின்றி உலகின் பல இடங்களிலும் உள்ளது. இவர்கள் தங்கள் குடியிருப்புக்கு அருகிலுள்ள காட்டை அழித்து வெட்டிய மரங்களைத் தீயிட்டுக் கொளுத்தி அவ்விடத்தில் விவசாயம் செய்து, அதன் மூலம் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து கொள்கின்றனர். ஏனெனில் நிலத்தின் வளம் குறைந்து விடுவதால் அதிக பலன் கிடைக்காது என்பதை அனுபவம் வாயிலாக உணர்ந்துள்ளனர். எனவே அடுத்த ஆண்டு மற்றொரு இடத்தில் காடுகளை அழித்து பயிர் செய்துள்ளனர். ஆண்டுதோறும் அவ்வாறு செய்வதால் நிலம் நல்ல விளைச்சலைத் தந்தது. இவ்வாறு வருடந் தோறும் காட்டை அழித்து விவசாயம் செய்வதை இவர்கள் ‘புதுக்காடு வெட்டுதல்’என்று கூறுகின்றனர்.

வருடந்தோறும் புதுக்காடு வெட்டிப் பயிர்செய்வதற்கு மத்திய அரசு தடைவிதித்து 1952 இல் வனப்பாதுகாப்புச் சட்டம் இயற்றியது. பழங்குடியினர் விவசாயம் செய்வதற்குரிய நிலம் அளந்து ஒதுக்கப்பட்டது. வனப்பகுதியில் அரசு மற்றும் தனியாருக்குரிய ரப்பர்,கிராம்பு,மிளகு,ஏலக்காய் ஆகிய தோட்டங்கள் அமைப்பதாலும் காடு வளர்க்கும் திட்டத்தின் கீழ் தேக்குஇசவுக்குஇயூக்கலிப்டஸ் போன்ற மரங்கள் வளர்க்கப்படுவதாலும் இவர்கள் தங்கள் விருப்பம் போல் காட்டுப்பகுதியை அழித்து விவசாயம் செய்யும் உரிமையை இழந்து வருகின்றனர். நில எல்லை வரையறை செய்யப்பட்ட பின் வருடத்திற் கொருமுறை காட்டை அழித்து விவசாயம் செய்யும் பழைய முறை தற்போது இல்லை.

இடம் பெயரும் வேளாண்மை

இவர்களில் முக்கியத் தொழில் விவசாயம். விவசாயத்தை இவர்கள் மிகவும் நுட்பமாக செய்கிறார்கள். முதலில் விவசாயம் செய்யும் இடத்தைத் தேர்ந்தெடுத்துத் தீ வைத்துப் பொசுக்குக்கிறார்கள். அதில் உதிரும் சாம்பலையே எருவாக்கிக் கொள்கிறார்கள். மழை பெய்தவுடன் அந்த மண்ணைக் கிளறி விதைகளைத் தூவுகிறார்கள். நெல்,கேழ்வரகு,திணை போன்றவை முதல் நிலைப் பயிர்கள். ஊடு பயிர்களாக அவரை, பூசணி போன்ற காய்கறி விதைகளையும் இடுவார்கள். ஒரு இடத்தில் மூன்று முறைக்கு மேல் பயிர் செய்ய மாட்டார்கள். அதற்கு மேல் அங்கு விளைச்சல் அவ்வளவாக இருக்காது. அதனால் வேறொரு இடத்தைத் தேர்வு செய்து விவசாயம் செய்வார்கள். மீண்டும் அதே இடத்தில் விவசாயம் செய்ய வரும்போது குறைந்தது பதினைந்து வருடங்களாவது ஆகியிருக்கும். இதுதான் அவர்களின் பாரம்பரிய விவசாய முறை இதனால் காட்டின் தன்மை எந்த விதத்திலும் பாதிப்பதில்லை. வன உரிமைச் சட்டம் வந்த பிறகு அரசாங்கம் அவர்களை இந்த முறையில் விவசாயம் செய்ய அனுமதிப்பதில்லை.

காட்டு இலாக்காவினரின் அனுமதியோடு குறிப்பிட்ட மலைப் பகுதியை எடுத்துக் கொண்டு அனைவரும் கூடி எல்லையை வரையறை செய்து கொண்டு பச்சை இலை தழைகளை வெட்டிப்

பொட்டலமாக செய்து எல்லை செய்யப்பட்ட பகுதிகளுக்குள் தீயை வைத்து விடுகின்றனர். தீ குறிப்பிட்ட எல்லையைத் தாண்டி விடாதிருக்கக் காவல் செய்கின்றனர். பின்னர் அடுத்த நாளில் எரிந்தும் எரியாமலும் கிடக்கும் விறகுக் கட்டைகளையும் இலை தழைகளையும் அகற்றி விட்டு வருகின்றனர்.

மழை பெய்ததும் ஈரப்பதம் மாறிவிடுவதற்குள் சோளம் தினை கேழ்வரகு சாமை போன்ற சிறு தானியங்களை விதைக்கின்றனர். முதுவர்கள் தங்கள் நிலங்களில் தாங்களே விழைக்கின்றனர். கூலி வேலைகளுக்குச் செல்வதில்லை. சில வேலைகளில் காட்டு இலாக்காவினர்க்காக மலைக் காடுகளைவெட்டுதல் காய்இ கனிகளைப் பறித்தல் போன்ற வேலைகளைச் செய்து கொடுக்கின்றனர். பெண்கள் ஆடுஇ மாடுகளின் சாணங்களைச் சேகரித்து விற்பனை செய்கின்றனர்.

வேளாண்மை

மலையின மக்கள் விவசாயம் முறை வெட்டி எரிப்பு வேளாண்மை முறையாகும். வெட்டி எரிப்பு வேளாண்மை என்பது தொன்று தொட்டு நிகழ்ந்து வரும் ஒன்றெனலாம்.

மாசி பங்குனி மாதங்களில் காட்டுப் பகுதியைத் தேர்வு செய்து அங்கு நிறைந்திருக்கும் சிறிய மரங்களையும், குற்றிச் செடிகளையும் வெட்டிக் காயவிடுவர். நன்றாகக் காய்ந்த பின் நெருப்பிட்டு எரிப்பர் எரித்த சில மாதங்களில் அந்த இடத்தில் மண்ணைக் கொத்தி பதப்படுத்துகின்றனர். மழை பெய்தவுடன் விதை விதைப்பர். இத்தகைய விவசாய முறையை

“கரிபுன மயங்கிய வன்கட் கொல்லை
ஐவனம் வித்தி” **(பாடல் - 159)**

என்று புறநானூற்றுப் பாடல் விளக்குகின்றது. காட்டெரிப்பு முறையை முதுவர்கள் செப்புக்காடு, கொத்துக்காடு, போடுகாடு என்ற பெயர்களால் சுட்டுகின்றனர். ‘‘முதுவர்கள் வெட்டி எரிப்பு வேளாண்மை குமரி எனப்படும்’’ வெட்டி பக்குவப்படுத்தப்பட்ட நிலத்தில் தினையை விதைக்கின்றனர். பெரிய மலைச் சாரலில் (இருங்கல் அடுக்கத்து) என் அண்ணன் மார்கள் உழுது விதைத்த கரிய அடிப்பகுதியைக் கொண்ட செந்தினைப் பயிரை கிளிகள் தின்று விடும் என்பதனை நற்றினையும்.

“மரம் கொல் கானவன் புனம் துளர்ந்து
வித்திய இறங்கு குரல் இறடி” **(பாடல் - 214)**

என்று குறுந்தொகையும் சுட்டும் பண்டைத் தமிழரின் வெட்டி எரிப்பு வேளாண்மை முறை இன்றும் முதுவர்களின் வாழ்வில் தொடர்கின்றது. மலைகளிலிருந்து அருவி ஒழுகி வரும் நீர் நிறைந்த பகுதிகளில் நடவு நட்டு நெல் விவசாயம் செய்கின்றனர். சித்திரை வைகாசி மாதங்களில் விதை விதைத்து கார்த்திகை மாதத்தில் அறுவடை செய்கின்றனர்.

பயிர் விளைவுக்கு ஏற்பப் புதுக்கொல்லையை உருவாக்கும் போது குறவர்கள்; பழங்கொல்லையில் உள்ள மரங்களைச் சுட்டெரிப்பதனால் உண்டான புகையைச் சேற்றில் அழுந்தும் வண்டிக்கு உவமையாக

“இதைமுயல் புனவன் புகைநிழல் கடுக்கும்
மாமூது அள்ளல் அழுந்திய சாகாட்டு” **(அகம்.140: 11 12)**

இவ்வாறு காட்டை எரிக்கும்போது உருவாகும் சாம்பலானது நிலத்திற்கு உரமாக அமைத்து பற்பல நன்மைகளைச் செய்கிறது.

கீரை, பூசணி, பீன்ஸ், காட்டு மிளகு, கூவக்கிழங்கு, சேப்பக்கிழங்கு, மரவள்ளிக் கிழங்கு, வள்ளிக் கிழங்கு, போன்றவற்றை தேவைக்கு ஏற்ப இவர்கள் பயிர் செய்து கொள்கின்றனர். மரவள்ளிக்கிழங்கு இவர்களது முக்கிய உணவுப் பொருளாக உள்ளது. இக்கிழங்கு ஆண்டு முழுவதும் கிடைக்கும் வகையில் மீண்டும் மீண்டும் இது தொடர்ந்து பயிர் செய்யப்படுகிறது.

வேட்டை தொழில்

வேளாண்மை தொழிலுடன் வேட்டைத் தொழிலும் இவர்களது முக்கிய தொழிலாகும். இவர்கள் பிடிக்கும் எல்லா விலங்குகளையும் வேட்டை என்றே கொள்கின்றனர். வேட்டையாடுதல் இவர்களிடையே பழங்காலம் தொட்டே நிலவி வந்ததை. இவர்களிடம் பயின்று வரும் வாய்மொழி தொழிற்ப் பாடல்கள் உணர்த்துகின்றன.

மலைக்கு மலை நடுவா
மானுக்கன்னு கண்ணி வச்சு
செடிக்குச் செடி நடுவா
சிட்டைக்குன்னு கண்ணி வச்சு – என்றும்

மலையேறி வேட்டையாடி சாமி
வேர்த்தும் வருவாருஞ் சொக்கநாதன்
தங்க மலையேறி வேட்டையாடி – சாமி
தவிச்சு வருவாருஞ் சொக்கநாதன்

என்றும் வழங்கப்படும் முதுவர்களின் வாய்மொழித் தொழில் பாடல்கள் இவர்தம்; வேட்டைத் தொழிலையும் இத்தொழில் தெய்வத்தின் தொழிலாக உயர்த்திச் சிறப்பிக்கப்படுதலையும் உணர்த்துகின்றது. வேட்டைக்காக இவர்கள் கண்ணி, அம்பு வில், துப்பாக்கி போன்றவற்றை பயன்படுத்துகின்றனர். மலைக்காடுகளில் வாழும் கேளையாடு , மான், கீரி, உடும்பு, குரங்கு, மலை அணில், போன்றவற்றைச் சுட்டு வீழ்த்துவர். முயல், காடை, காட்டுக்கோழி, போன்றவற்றைக் கண்ணி வைத்துப் பிடிக்கின்றார்கள்.

இவர்கள் பலவகைக் கண்ணிகளைப் பயன்படுத்துகின்றனர். பெரியவில் போன்று தோற்றமளிக்கும் கண்ணி ஒருவகை - இதனைச் செங்குத்தாகத் தரையில் நட்டு வைப்பர். கூரிய முனையை உடைய முக்கோண வடிவிலான மூங்கிலோடு அது சுருக்கினால் இணைக்கப்பட்டிருக்கும். அவ்வழியாக வரும் விலங்குகள் அதனுள் நுழையும் போது சுருக்கு நழுவ விலங்கு கண்ணியில் அகப்பட்டுக் கொள்ளும்.

விளார் என்பது மற்றொரு வகைக் கண்ணியாகும். விளாரிலிருந்து சுருக்குடைய ஒரு கயிறு தொங்கவிடப் பட்டிருக்கும். தரைமேல் வைக்கப்பட்ட இதன் மேல் கோழி முதலான பறவை, விலங்குகள் கால் வைக்கும் போது கால் சுருக்கில் மாட்டிக் கொள்ளும் சுருக்கில் மாட்டிய பறவை விடுபட முயற்சிக்கும் போது விளார் நிமிர்ந்து பறவை தலைகீழாக தொங்கும்.

சங்க கால குறிஞ்சித்திணை மக்களும் புலி,யானை,பன்றி முதலிய பெரிய விலங்குகளைப் பிடிப்பதற்கு பொறிகளைப் பயன்படுத்தியுள்ளனர். பெரிதும் சீற்றம் கொண்ட ஆண்பன்றி சேற்றில்

விழுந்தமையால் அதனுடைய முதுகுப்புறத்தில் புழுதி படிந்திருக்கும். அத்தகைய பன்றி கானவர்கள் வைத்திருந்த சுருக்குவார் (பொறி) பிளவிலே விழுந்தது. விழுந்தவுடன் அவ்வாரினை விலக்கி காட்டுநாய்கள் சூழ்ந்து பன்றியைக் கொன்றன. இதனை,

"சிறுகட் பன்றிப் பெருஞ்சின ஒருத்தல்
சேறுகட் ஆடு இரும் புறம் நீறொரு சிவண
வெள் வசிப் படீஇயர்இ மொய்த்த வள்வு அழீஇ
கோள் நாய் கொண்ட கொள்ளைக்" **(நற். 82:7-10)**

என்ற பாடல் குறிப்பிடுவதன் மூலம் சங்க காலத்திலும் வேட்டையாடப் பட்ட செய்தியையும் அதற்கு பொறிகள் பயன்படுத்தியதையும் அறிய முடிகிறது.

மலையில் சேகரிக்கும் பொருள்கள்

முன்னோர்கள் மலைகளிலும் காடுகளிலும் கிடைக்கும் நெல்லிக்காய், கடுக்காய், பூச்சக் கொட்டாங்காய், வலம்புரி இடம்புரிக்காய், சாதிக்காய், மாசிக்காய், இலவங்க பட்டை ,குங்கிலியம் போன்றவற்றையும் சேகரித்து விற்கின்றனர். ஒரு சில முதுவர் குடிகளில் ஆடுஇ மாடு போன்ற கால்நடைகளையும் வளர்க்கின்றனர். விவசாயத்திற்குக் காளைகளைப் பயன்படுத்தி உழவு செய்தனர். மாடுகளை வளர்த்து வெளியாட்களுக்கு விற்பனை செய்து வந்தனர். புலிகள் ஆடு, மாடுகளை கொன்று உண்பதால் அவற்றை வளர்க்கக் கூடாது என்று தற்பொழுது வனத்துறையினர் உத்தரவு பிறப்பித்துள்ளனர். எனவே கோழிகளை மட்டும் ஒரு சில வீடுகளில் வளர்க்கின்றனர்.

பெண்கள் அவர்களுடைய நிலங்களில் வேலை செய்வது மற்றுமன்றி காடுகளில் விளைந்துள்ள காட்டு இஞ்சிகளை தோண்டி எடுத்து வந்து மலையின் கீழ் அமைந்துள்ள ஊர்களில் விற்பனை செய்து வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்கி செல்கின்றனர். ஆண்கள் தோட்டவேலை செய்யும் நேரம் தவிர்த்து மற்ற நேரங்களில் ஆற்றிற்கு சென்று மீன் பிடிப்பதுஇ தேன் எடுப்பது போன்ற வேலைகளை செய்கின்றனர். வீட்டிற்கு தேவையான தேன் மீன் போன்றவற்றை வைத்துவிட்டு மீதம் உள்ளதை விற்பனை செய்கின்றனர்.

கிழங்கு எடுத்தல்

வள்ளிக்கிழங்கு, தாவுத்தங் கிழங்கு, சேப்பங்கிழங்கு தை மாசி மாதங்களில் காடுகளில் எடுக்கச் செல்கின்றனர். அம்மாதத்தில் அவற்றை தோண்டி எடுக்கின்றனர். வள்ளிக்கிழங்கு, முள்ளு வள்ளி, வெத்தலை வள்ளி என இரு வகைப்படும். முள்ளு வள்ளிக் கிழங்கே அளவில் பெரியதாகவும் சுவையாகவும் இருக்கும் என்கின்றனர். இவ்விரண்டு மாதங்களில் எடுத்தால் தான் கிழங்கு உணவிற்குப் பயன்படும் என்கின்றனர். இம்மாதங்களில் கிழங்கு நன்கு விளைந்து காணப்படும். சாதாரணமாக கிழங்கு எடுப்பதற்கு இரண்டு அடி முதல் பதினைந்து அடிவரை தோண்டுவராம். ஆழமாக தோண்டும் குழிகளிலிருந்து இருபது கிலோ வரை கிழங்குகள் கிடைக்கும் என்று கூறுகின்றனர். அக்காலங்களில் கிழங்குகளையே முக்கிய உணவாகக் உட்கொண்டனர். விவசாயத் தொழில் செய்து வரும் இவர்கள் தங்கள் நிலங்களில் வேலை இல்லாதபோது அருகில் இருக்கும் காட்டுக்குள் வேலைக்கும் செல்கின்றனர். பரம்பிக்குளம் சுற்றி உள்ள அனைத்து வேலைகளையும் செய்கின்றனர்.

ஊடு பயிர்ள விளைச்சல்

முதுவர் மலையை ஒட்டி மலைச்சரிவுகளில் குடியிருப்பதனால் பாக்கு மரங்களையே அதிகம்

வைத்துள்ளனர். அவர்களுக்குள்ளேயே குறிப்பிட்ட நிலப்பகுதிகளை பிரித்து கொண்டு பாக்கு மற்றும் குருமிளகினை பயிர் செய்கின்றனர். அவ்வாறு பயிர் செய்யப்பட்ட காடுகளின் ஊடே,ஊடு பயிர்களை விளைவிக்கின்றனர். இவ்வாறு ஊடு பயிராக காணப்படுபவை மஞ்சள், சிறுகீரை வகைகள், இஞ்சி போன்றவைகளும் ஊடு ஊடே அவகோடா செடிகளையும், மலை நெல்லியும் காணப்படுகின்றன.

ஊடுபயிரிடுதலில் ஒரு பயிரின் விளைச்சல் இல்லாமல் போனாலும் மற்றொரு பயிரின் மூலம் வருவாய் கிடைக்கும். இத்தகைய ஏற்றம் ஒரே பயிரைப் பயிரிடுவதில் கிடைக்காது. ஊடுபயிரிடுவதால் ஒரு பயிர் மற்றொரு பயிருக்கு இயற்கை மூடாக்காக மாறிவிடுகிறது. இதனால் மண்ணின் ஈரப்பதம் காக்கப்படுவதால் பயிர் நன்கு வளர்கிறது. இதனை "புடலைப் பூ வர ஆரம்பிச்சதும் வாழையை நட்டினேன் ஊடுபயிரா வாழையைச் சுற்றி புடலை வளர்ந்து கிடப்பது இயற்கை மூடாக்காக மாறிடுது" (மண்வாசனை மார்ச்.16-31 ப-69) என்று உழவர் ரங்கராஜ் குறிப்பிடுவதை வைத்து அறியமுடிகிறது.

பிற தொழில்கள்

இவர்கள் காடுகளில் விளைவிக்கும் பாக்கு மரம் மற்றும் குருமிளகு கொடியினை (சுதுனு) அதாவது கேரள அரசாங்கம் இவர்களுக்கு குடும்பத்திற்கு இத்தனை மரம் கொடி என வழங்குகின்றன. அதையே இவர்கள் விளைவிக்கின்றனர். மற்ற இனத்தவர்களை காட்டிலும் விவசாயம் செய்யும் தொழிலை இன்னும் பின்பற்றும் இனமாக இம்முதுவர் இனம் தான் காணப்படுகின்றன. இதற்காகவே 2023 ஆம் ஆண்டு பழங்குடிகளில் சிறந்த விவசாயி இனமாக முதுவர் இனத்திற்கே காசோலையும் விருதும் வழங்கி கௌரவப்படுத்தியுள்ளது.

முதுவர்கள் பெரும்பான்மையாக தன் பிள்ளைகளை படிக்க வைக்கின்றனர். அவ்வாறு படித்தவர்கள் மலையில் இருந்து ஊர் புறங்களில் வேலைக்கு செல்கின்றனர். அவ்வாறு வேலை தேடி சென்றவர்கள் பெரிய வேலைகளில் இருப்பதாக கூறுகின்றனர். முதுவர் இன தலைவரான மூப்பனின் மகன் கேரள மருத்துவ மனையில் தற்போது வேலை செய்வதாக மல்லியப்பன் கூறுகின்றார். அவர் மட்டும் அன்றி பல்வேறு ஆண்களும் பெண்கள் ஊரப்; புறங்களில் கல்லூரி, வணிக அலுவலகம், மற்றும் அங்கே உள்ள கேரள அரசு கட்டுப்பாட்டு துறை மற்றும் வாகன ஓட்டும் துறை என பல்வேறு வேலைகளில் பணிபுரிகின்றனர்.

மூவினத்தவர்களுக்கும் பொதுவான உழவுத் தொழில்

மலைப் பகுதியில் கல் அதிகமாக நிறைந்துள்ள பகுதி என்பதால் இங்கு அதிக அளவில் நிலத்தை உழாமல் வேளாண்மை செய்துள்ளனர். இந்நிலத்தில் உளாமலேயே மூங்கிலின் நெல்லும்இ சுளையையுடைய பலாவும்இ கொடியையுடைய வள்ளிக்கிழங்கும்இ மலைத்தேனும் விளைந்ததை காணலாம் அவற்றைப் போன்றேஇ கபிலர் பாரியின் பறம்பு மலையில் விளைந்ததை பற்றி

"உழவர் உழாதன நான்கு பயனுடைத்தே
ஒன்றே சிறியிலை வெதிரின் நெல் விளையும்மே
இரண்டே தீம் சுளைப் பலவீன் பழம் ஊழ்க்குமே
மூன்றே கொழுங்கொடி வள்ளிக்கிழங்கு வீழ்க்கும்மே
நான்கே அணிநிற ஓரி பாய்தலின் மீதழிந்து" **(புறம்.109:3-7)**

என்று பாடுவதன் மூலம் அறிய முடிகிறது.

இதில் மூங்கிலினை உழுது பயிர்செய்யத் தேவையில்லை. அது இயற்கையாகவே வளரக்

கூடியது. பலா மரமும்இ வள்ளிக் கிழங்கும் அத்தகையவே ஆகும். தேனும் மனித முயற்சி ஏதுமின்றி தேனீக்களால் சேகரிக்கப்படுவது ஆகும். ஆகவே மேற்கண்ட பொருட்களால் உழுதல் என்பது தேவையற்ற ஒன்றாகும். இப்பயிர்கள் எந்நிலத்தில் வளர்ந்தாலும் அதற்கு உழுதலென்பது தேவையற்றதாகும்.

முடிவுரை

முதுவர்கள் ஆரம்பகாலங்களில் இடம் பெயரும் வேளாண்மை, வெட்டி எரிப்பு வேளாண்மை,வேட்டையாடுதல்இகிழங்கு எடுத்தல் மற்றும் காடுகளில் கிடைக்கக் கூடிய பொருட்களை சேகரித்தல் போன்ற வேலைகளையே செய்துள்ளனர். நாளடைவில் ஒர் இடத்தில் நிலையாக தங்கிய பின்னர் நெல் விளைவிக்க நீர் பற்றாக்குறை நில வளம் இல்லாமையாளும் பாக்கு மற்றும் மஞ்சல் விளைச்சலை பெரும்பான்மையாக செய்கின்றனர். அவை மட்டும் அன்றி காட்டில் கிடைக்க கூடிய காட்டு இஞ்சி சேகரிப்பதையும் கேரள அரசு வேலைகளிலும் பிற வேலைகளிலும் ஈடுபட்டுள்ளதை இக்கட்டுரை மூலம் அறிய முடிகிறது.

துணை நூற்பட்டியல்

1. உ.ஆ.பாலசுப்பிர மணியன்.கு.வெ, த.ப.பரிமணம், புறநானூறு, பாவை பிரிண்டர்ஸ், சென்னை – 14. மு.ப – ஏப்ரல் -2004.
2. உ.ஆ.பாலசுப்பிர மணியன்.கு.வெ, த.ப.பரிமணம், குறுந்தொகை, பாவை பிரிண்டர்ஸ் சென்னை – 14, மு.ப – ஏப்ரல் -2004.
3. உ.ஆ.பாலசுப்பிர மணியன்.கு.வெ, த.ப.பரிமணம், அகநானூறு, பாவை பிரிண்டர்ஸ், சென்னை – 14, மு.ப – ஏப்ரல் -2004.
4. உ.ஆ.பாலசுப்பிர மணியன்.கு.வெ, த.ப.பரிமணம், நற்றிணை, பாவை பிரிண்டர்ஸ், சென்னை – 14, மு.ப – ஏப்ரல் -2004.

References

1. *U.A. Balasubramanian & T.P. Parimanam - Purananuru, Pavai Printers, Chennai – 14 First Edition – April 2004.*
2. *U.A. Balasubramanian & T.P. Parimanam - Kuruntokai, Pavai Printers, Chennai – 14First Edition – April 2004.*
3. *U.A. Balasubramanian & T.P. Parimanam - Akananuru, Pavai Printers, Chennai – 14. First Edition – April 2004.*
4. *U.A. Balasubramanian & T.P. Parimanam - Natrinai, Pavai Printers, Chennai – 14. First Edition – April 2004.*

Cite this Article in English

Anjali.B, Jamuna.V "Mudhuvas Thozhil Nilaigal" *MASIVAN : JOURNAL OF LANGUAGE AND LITERATURE STUDIES, ISSN: 3048-7854, Vol.3 Issue 2, July 2026, pp. 1-7*

2

தொல்காப்பியர் சுட்டும் மலர்களின் மருத்துவச் சிந்தனைகள்

Medicinal Perspectives on the Flowers Mentioned by Tolkappiyar

ஆ. கார்த்திக்கேயன், மணிமேகலை.இர

தமிழ்த்துறை, பிஎஸ்ஜிஆர் கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, பீளமேடு, கோயம்புத்தூர் -641004.

Karthickeyan.A, Manimegalai.R

Tamil Department, PSGR Krishnammal College for women, Peelamedu, Coimbatore- 641004.

Orcid ID: https://orcid.org/0009-0001-0918-4964

Orcid ID: https://orcid.org/0000-0002-7060-8551

DOI: 10.5281/zenodo.21735691

Abstract

Nature and natural medicine are inseparably intertwined with human life in Tamil literature. Particularly, the Purathinai poems of Sangam literature portray human life, warfare, heroism, and social values through various elements of nature. Among these, flowers serve as important symbols and identifiers of the Purathinai landscape. Classical Tamil works such as the Tolkappiyam and the Purapporul Verba Mulai record a variety of flowers, ranging from Vetci to Uzhinjai, as symbolic markers of different Purathinai categories. These flowers are significant not only as literary symbols but also as valuable medicinal resources. In Siddha medicine, folk medicine, and other traditional systems of natural healing, they have been widely used in the treatment of various ailments. This study aims to examine the literary significance of the Purathinai flowers described in the Tolkappiyam and the Purapporul Venba Mulai, as well as their medicinal properties and therapeutic applications, based on data collected through textual analysis and field research.

ஆய்வுச் சுருக்கம்

தமிழ் இலக்கியங்களில் பதிவான இயற்கையும், இயற்கை மருத்துவமும் மனித வாழ்வில் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன. சங்க கால இலக்கியங்களில் குறிப்பாகப் புறத்திணையில் மனித வாழ்வியலை வெளிப்படுத்தும் போது, பல்வேறு வகைப்பட்ட பூக்கள் முக்கியக் குறியீடுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. தொல்காப்பியம் மற்றும் புறப்பொருள் வெண்பாமாலை போன்ற நூல்களில் வெட்சிப்பூ முதல் உழிஞைப் பூ வரை இப்பூக்கள் இலக்கியச் சின்னங்களாக விளங்குகின்றன. இலக்கியத்தில் மட்டுமல்லாது மருத்துவத்தில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவை. இயற்கை மருத்துவத்தில் பல நோய்களுக்கு இவை மருந்தாகப் பயன்பட்டுள்ளன. இப்பூக்களின் மருத்துவத் தன்மை கள ஆய்வின் வழியும், நூல்களின் வழியும் பெறப்பட்டன. பெறப்பட்ட தரவுகளின் படி இப்பூக்களின் மருத்துவக் குணங்களையும் அதன் பயன்பாட்டையும் ஆராய்வதை இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.

Keywords: *Purathinai, Tolkappiyam, Purapporul Venba Mulai, Purathinai Flowers, Natural Medicine, Siddha Medicine, Medicinal Plants, Sangam Literature, Literary Symbolism, Field Study,* புறத்திணை, தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை, புறத்திணைப் பூக்கள், இயற்கை மருத்துவம், மருத்துவத் தாவரங்கள், சித்த மருத்துவம், சங்க இலக்கியம், இலக்கியக் குறியீடுகள், களஆய்வு.

முன்னுரை

ஈராயிரம் ஆண்டுகட்கு முன் தமிழகத்தில் வாழ்ந்த தமிழ்ப் பெருங்குடி மக்களுடைய வாழ்வின் வளங்களை விவரிக்கும் சங்க நூல்களில் மருத்துவக் கலை பற்றிய பல்வேறு செய்திகள் உவமைகளாகவும், வர்ணனைகளாகவும் விவரிக்கப்பட்டுள்ளன. இக்குறிப்புகளை நோய், மருந்து, மகளிர் மருந்து, மூலிகை மருத்துவம், அறுவை மருத்துவம், மருத்துவ நம்பிக்கை,மருத்துவக் கொள்கை என்னும் பிரிவுகளில் பகுத்து ஆராயப்பட வேண்டியுள்ளது. இவற்றை ஆழ்ந்து, ஆராய்ந்து நோக்குங்கால் தமிழ் மருத்துவ வரலாறு பற்றிய வேர்கள் புலனாகின்றன. தமிழ் மக்களின் வாழ்வியலை அறியவும், ஆராயவும் பெரிதும் உதவும் முதல் நூல் தொல்காப்பியம்.

தொல்காப்பியர் பல மருத்துவக் குறிப்புகள் மற்றும் மக்களின் வாழ்க்கை முறைகள் பற்றிக் கூறுவதைப் பொருளதிகாரத்தில் காண முடிகிறது. தொல்காப்பியம், சங்க இலக்கியம் ஆகியவற்றில் நோய், பிணி என்ற இரு சொற்கள் உடல் நலக்குறைவு என்ற நிலையினைச் சுட்டுகிறது என்றாலும் நோய் பையுள் மன வருத்தம் தருகின்ற துயரங்கள் என்றும், உடல் வருத்தம் தருகின்ற துயரங்கள் பிணி சிறுமை என்றும் வரையறுக்கப்பட்டுள்ளது. நோய் தீர்ந்துவிடும்.பிணி நீங்காது. பிறவி, காமம், பசி ஆகியவற்றைத் தமிழ்ச் சான்றோர் பிணி என்றனர். அதனை, "பையுளும், சிறுமையும் நோயின் பொருள்" *(தொல். சொல்:341)* என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

ஒல்காப்புகழ் தொல்காப்பியரின் பொருளதிகாரம் மற்றும் ஐயனாரிதனாரின் புறப்பொருள் வெண்பாமாலையிலுள்ள புறத்திணையில் தமிழர்களின் வாழ்வை அகம் புறம் என இரு கூறுகளாகப் பிரித்துக் காட்டியுள்ளனர். அகத்திணை ஏழாகவும் புறத்திணை ஏழாகவும் உள்ளன. இதில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை, கைக்கிளை ஆகிய ஏழும் அகத்திணையில் அடங்கும். வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை ,காஞ்சி, பாடாண் ஆகிய ஏழும் புறத்திணையில் அடங்கும். புறத்திணையில் உள்ள "கரந்தை" வெட்சியுள் அடங்கும். உழிஞைத் திணையினுள் "நொச்சி" அடங்கும்.

ஆக்களைத் திருடுவதும் திருடிய ஆக்களை மீட்பது மாகிய செயல்கள் வெட்சித் திணையில் அடங்கும். ஒரு நாட்டின் மீது இன்னொரு நாட்டரசன் படையெடுத்துச் செல்வதைக் குறிக்கும் திணை "வஞ்சி" ஆகும். அரண்களை முற்றுகை இடுவதைப் பற்றிக் கூறுவது "உழிஞைத்திணை" ஆகும். இத்திணையின் மறுதலை ‘‘நொச்சித் திணையாகும்’’. பெருவேந்தர்களின் போரையும் தனிமனிதனின் வீரத்தையும் சிறப்பித்துக் காட்டும் திணை மற்றும் போரின் உச்சநிலை என்று தும்பைத் திணையைக் கூறலாம் ஒருவனின் வெற்றியும் வீரமும் கண்டு உள்ளம் கிளர்ந்த ஒருவர் அவற்றைப் புகழ்தல் "வாகைத்திணை" ஆகும். ஒவ்வொரு திணை நிலங்களிலும் போர் நடக்கும். அவ்வாறு போர் நடக்கும் பொழுது போர் அரசர்களும் வீரர்களும் தங்களை எந்தெந்தத் திணை வீரர்கள் என்று அடையாளம் காட்டுவதற்காகத் தங்களுடைய அடையாளப் பூவாக அந்தந்தத் திணைகளுக்குரிய பூக்களைச் சூடுவர். அத்தகைய சிறப்பான பூக்களினுடைய மருத்துவத் தன்மையையும் மருத்துவப் பயன்பாட்டையும் ஆய்வுக்கட்டுரை ஆய்வுக்குட்படுத்துகிறது.

புறத்திணையில் உள்ள பூக்களின் மருத்துவக் குணம்

வெட்சிப்பூ

தொல்காப்பியம் மற்றும் புறப்பொருள் வெண்பாமாலை தமது புறத்திணையியலில் வெட்சி முதலாக காஞ்சி ஈறாக எட்டு மலர்களைப் பதிவிட்டுள்ளன. அவற்றில் முதலாக அமைவது வெட்சி. வெட்சிப்பூ வெப்பமும் ஈரப்பதமும் நிலவும் பருவங்களில் மலரக்கூடியது. வெட்சிப் பூவை (சிவப்பு) இன்று பேச்சு வழக்கில் ‘‘இட்லிப்பூ‘‘ என்றழைக்கின்றனர். வெட்சிப்பூவை ஆங்கிலத்தில் ‘‘*Jungle Geranium*’’ என்றும் தாவரவியலில் "*Ixoracoccinea*" என்றும் அழைக்கின்றனர். இப்பூ தோல் நோய்களுக்கு மருந்தாகப் பயன்பட்டிருக்கிறது. ஜூரரோகம், மேகச்சூடு, சரீர ஆயாசம், தாகம் போன்ற நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுத்தலாம் என சித்தானந்தா தமது நூலில் குறிப்பிடுகின்றார்.

பயன்படுத்தும் முறை

வெட்சிப் பூவை எடுத்து அதனைக் கசக்கி அந்தச் சாற்றை உடம்பில் எந்த இடத்தில் தோல் சம்பந்தப்பட்ட நோய் இருக்கிறதோ அங்கு அந்தச் சாறைத் தேய்க்க வேண்டும். அப்படித் தேய்த்து வந்தால் ஒரு மாதம் அல்லது இரண்டு மாதத்தில் நலமாகும்.

கரந்தைப்பூ

இரு இலக்கண நூல்களிலுள்ள புறத்திணையியலில் கரந்தைப் பூ இரண்டாவதாக இடம்பெறுகின்றது. இதன் மலர்ச்சி பொதுவாக மழைக்காலத்தைத் தொடர்ந்து ஈரப்பதம் நிலவும் பருவத்தில் மணல் கலந்த மண் மற்றும் செம்மண்ணில் மலர்கின்றன. கரந்தைப் பூவை இன்று பேச்சு வழக்கில் "வாடாமல்லி" என்று கூறுகின்றனர். கரந்தைப் பூவை ஆங்கிலத்தில் *EAST INDIAN GLOBE THISTLE* என்றும் தாவரவியலில் *SPHAERANTHUS INDICUS* என்றும் அழைக்கின்றனர். கரந்தை எனப்படும் பூ சித்த மருத்துவத்தில் மிக முக்கியமான அபூர்வமான மருத்துவ குணங்கள் கொண்ட ஒரு சிறிய செடி இனமாகும். நோய் எதிர்ப்பு சக்தி, ரத்த சுத்திகரிப்பு, தோல் நோய்கள், வயிற்றுப் பூச்சிகள், செரிமானம், முடி வளர்ச்சி, மூளை மற்றும் இதயம், வெள்ளைப்படுதல், சர்க்கரை நோய், புற்றுநோய் போன்றவற்றிற்குக் கரந்தைப் பூவைப் பயன்படுத்துகின்றனர்.

பயன்படுத்தும் முறை

கரந்தைச் செடி மற்றும் பூவை எடுத்து, நிழலில் உலர்த்தி பொடி செய்து கொள்ளவும். இந்தப் பொடியுடன் சிறிதளவு வசம்பு சூரணத்தைச் சேர்த்து வைத்தால் ஒரு வருடம் வரை கெடாமல் இருக்கும். தினமும் கால் ஸ்பூன் பொடியை உட்கொண்டு வந்தால் உடல் வலுப்பெறும் . கரந்தை இலை மற்றும் பூ அரை கிலோ எடுத்து, நன்றாகக் காய வைத்து தூள் செய்து, ஒரு தேக்கரண்டிப் பொடியை ஒரு ஆளாக்குத் தண்ணீரில் கலந்து கொதிக்க வைத்து, தினமும் குடித்து வந்தால் பெண்களுக்கு ஏற்படுகின்ற வெள்ளைப்படுதல் போன்றவை குணமாகும்.

வஞ்சிப்பூ

இரு இலக்கண நூல்களிலுள்ள புறத்திணையியலில் வஞ்சிப்பூ மூன்றாவதாக இடம்பெறுகின்றது. இப்பூ நீர்வளம் மிகுந்த ஆற்றங்கரைச் சூழலில் மலர்கின்றன. வஞ்சிப் பூவை ஆங்கிலத்தில் *INDIAN WILLO* தாவரவியல் *SALIX TETRASPERMA* என்றும் அழைக்கின்றனர். வஞ்சி மரம் மற்றும் அதன் பூக்கள் பல அரிய மருத்துவ குணங்களைக் கொண்டவை. இது புராணங்களில் ‘‘சாகா மொழி’’ என்றழைக்கப்படுகின்றது. சிறுநீரகக் கோளாறுகள்,மஞ்சள் காமாலை, மலச்சிக்கல், சீதபேதி, காசநோய், சர்க்கரை நோய் போன்றவற்றுக்கு வஞ்சிப் பூவை மருந்தாகப் பயன்படுத்துகின்றனர்.

பயன்படுத்தும் முறை

வஞ்சிப் பூவை நிழலில் உலர்த்தி, பொடி செய்து நீண்ட நாட்களுக்குப் பயன்படுத்தலாம். புதிய பூக்களைப் பாலில் கலந்து காய்ச்சிக் குடிக்கலாம். பூக்களைத் தேனில் ஊற வைத்து உட்கொள்வது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.

காஞ்சிப்பூ

இரு இலக்கண நூல்களிலுள்ள புறத்திணையியலில் காஞ்சிப்பூ நான்காவதாக இடம்பெறுகின்றது. இப்பூ நீர்நிலைகள் மற்றும் ஆற்றங்கரையைச் சார்ந்த சூழலில் வண்டல் மற்றும் களிமண் கலந்த மண்ணில் மலர்கின்றன. காஞ்சிப் பூவை ஆங்கிலத்தில் INDIAN PORTIA TREE என்றும் தாவரவியல் TREWIA NUDIFLORA என்றும் அழைக்கப்படுகின்றனர். காஞ்சிப்பூ பல மருத்துவ குணங்களைக் கொண்ட ஒரு பாரம்பரிய மூலிகைப் பூவாகும். இது பொதுவாக உடலைக் குளிர்ச்சியாக வைக்கும், தோல் தொடர்பான நோய்களைத் தீர்ப்பதற்கும் காஞ்சிப்பூவைப் பயன்படுத்துகின்றனர். கண்குளிர்ச்சி, சருமப் பாதுகாப்பு, தலைமுடி வளர்ச்சி போன்றவற்றுக்கும் காஞ்சிப்பூவைப் பயன்படுத்துகின்றனர்.

பயன்படுத்தும் முறை

தலைமுடி பராமரிப்புக்குக் காஞ்சிப் பூவை நன்றாக இடித்துச் சாறு எடுத்து, நல்லெண்ணெயுடன் காய்ச்சி தலைக்குத் தேய்த்துக் குளித்து வரலாம் . தோல் பராமரிப்புக்குப் பூவைக் காயவைத்து பொடி செய்து குளிக்கும் போது சோப்பிற்குப் பதிலாக உடம்பில் தேய்த்துக் குளித்து வரலாம். பூக்களை நிழலில் காய வைத்து, டீ போட்டுக் குடித்து வந்தால் உடல் குளிர்ச்சியாக இருக்கும்.

உழிஞைப்பூ

இரு இலக்கண நூல்களிலுள்ள புறத்திணையியலில் உழிஞைப்பூ ஐந்தாவதாக இடம்பெறுகின்றது. இப்பூ மிதமான வெப்பநிலை, ஈரப்பதம் மற்றும் போதிய மழை போன்ற சூழல்களுடன் செம்மண்ணில் மலர்கின்றன. உழிஞைப்பூவை இன்று பேச்சு வழக்கில் "முடக்கத்தான்" என்று கூறுகின்றனர். உழிஞைப் பூவை ஆங்கிலத்தில் "BALLOON VINE" என்றும் தாவரவியலில் "CARDIOSPERMUM HALICACABUM" என்றும் அழைக்கின்றனர். உழிஞைப் பூ வாத நோய்களைக் குணப்படுத்தும். வயிற்றுவலி, மூட்டு வலி, காது வலி, உடலுக்கு குளிர்ச்சி போன்ற நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுத்தலாம். இது முடக்கறுத்தான் கொடியின் பூவாகும். முடக்கறுத்தான் என்பது முடக்கை அறுத்தல் அதாவது முடக்குவாதம் போன்ற நோய்களுக்குப் பயன்படுவதால் இது முடக்கறுத்தான் என்று பெயர் பெற்றது.

பயன்படுத்தும் முறை

உழிஞை இலைகள் மற்றும் பூக்களைப் பறித்து அரைத்து வீக்கம், மூட்டுவலி உள்ள இடங்களில் பற்றுப்போட்டால் வலி மற்றும் வீக்கம் குறையும். பூ மற்றும் இலைச்சாற்றை லேசாகச் சூடாக்கி, காதில் சில துளிகள் விட்டால் காது வலி நீங்கும். இந்தப்பூ மற்றும் இலைகளைச் சமைத்து வாரத்திற்கு ஒருமுறை உணவில் சேர்த்துக் கொள்வது வாதம் போன்ற நோய்களைத் தடுக்கும். உழிஞைப்பூவின் மருத்துவப் பயனை அறிய களஆய்வு மேற்கொண்ட போது உழிகைப் பூவையும் அதன் இலையையும் எடுத்து அரைத்து மூட்டு வலி எங்குள்ளதோ அந்த இடத்தில் வைத்துக் கட்டினால் மூட்டுவலி குணமாகும் மற்றும் அதனைப் பொரியல் செய்து சாப்பிட்டு வந்தால் முடக்குவாதம் போன்ற நோய்களும் குணமாகும் என்று தகவலாளர் தெரிவித்தார்.

நொச்சிப்பூ

இரு இலக்கண நூல்களிலுள்ள புறத்திணையியலில் நொச்சிப்பூ ஆறாவதாக இடம்பெற்றுள்ளது. இப்பூ வண்டல் மற்றும் செம்மண்ணில் ஜனவரி முதல் செப்டம்பர் அல்லது அக்டோபர் வரை நீண்ட கால மலர்ச்சிப் பருவத்தைக் கொண்டுள்ளது. நொச்சிப்பூவை ஆங்கிலத்தில் chaste tree என்றும் தாவரவியலில் vitex negundo என்றும் அழைக்கின்றனர். தலைவலி அதிகமான உடல் சோர்வதைத் தரக்கூடியது. உடலில் ஏற்படும் நோய்களுக்கான உடனடி அறிகுறி தலைவலி. ஜவ்வாது மலையில் வாழ்கின்ற மக்கள் இயற்கை முறையில் தலைவலியைக் குணப்படுத்துகின்றனர். "கடுமையான ஒற்றைத் தலைவலி ஏற்படும் போது நொச்சிக் கொழுந்தை நிறையப் பறித்து அதனைத் தலைமுழுவதும் வைத்து அதன்மேல் துண்டு கட்டிக்கொள்ள வேண்டும். இவ்வாறு கட்டிக் கொள்வதினால் கடுமையான ஒற்றைத் தலைவலி நீங்குகிறது". என்று மாரி குறிப்பிடுகிறார். இம் மருத்துவ முறை ஜவ்வாது மலையில் பரவலாகக் காணப்படுகிறது. நொச்சி இலை அதிகமான வெம்மை கொண்டவை. நொச்சிப்பூ குளிர்ச்சித் தன்மை உடையது.

பயன்படுத்தும் முறை

உலர்ந்த நொச்சிப் பூவை கற்கண்டுடன் சேர்த்துத் தேனில் கலந்து சாப்பிட்டு வர ரத்தம் கலந்த வயிற்றுப்போக்கு மற்றும் ரத்த வாந்தி ஆகியவை குணமாகும்.

தும்பைப்பூ

இரு இலக்கண நூல்களிலுள்ள புறத்திணையியலில் தும்பைப்பூ ஏழாவதாக இடம்பெறுகின்றன. தும்பைப்பூ மழைக்குப் பிந்தைய காலத்தில் முளைத்து வளர்ந்து, வறண்ட சூழலிலும் நிலைத்திருக்கும் தாவரமாக விளங்குகிறது. தும்பைப்பூவை இன்று பேச்சு வழக்கில் தும்பைச்செடி மற்றும் தட்டான் செடி என்றும் கூறுகின்றனர். தும்பைப் பூவை ஆங்கிலத்தில் LEUCAS FLOWER என்றும் தாவரவியலில் LEUCAS ASPERA என்றும் அழைக்கின்றனர். தும்பைப்பூ கண்வலி, கண்காசம், கண்படலம், மூக்குவலி, மூக்கில் புண், மூக்கடைப்பு, கபால நீர், தலைக்கனம், தலைவலி போன்ற நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுத்தலாம் என எம்.பழனியப்பன், பசி.மரு, மற்றும் P.L பழனியப்பன் பசி.மரு தமது நூலில் குறிப்பிடுகின்றார்.

பயன்படுத்தும் முறை

தும்பைப்பூவைக் கசாயமாகப் பயன்படுத்தலாம்.

"தாகங் கடிந்தொழியுஞ் சந்நிபா தங்களறு
மாகந்தனில் வருநோ யண்டுமோ – மாகந்த
வம்பைப் பீறுங்குயத்து மாதேநின் செங்கரத்தாற்
றும்பைப்பூத் தன்னைத்தொடு"

என்று (பதார்த்த குணபாடம் 711) குறிப்பிடுகிறது.

1. தும்பைப்பூ -50 கிராம்
2. தண்ணீர் – 2 லிட்டர்

தும்பைப்பூவைப் பறித்து சுத்தம் செய்து 2 லிட்டர் தண்ணீரில் போட்டுக் காய்ச்சி எட்டில் ஒன்றாகக் கசாயம் எடுத்து உணவு உண்ணும் முன் 100 மில்லி வீதம் தினமும் ஒருவேளை 48 நாள்

ஒரு மண்டலம் சாப்பிட்டு வந்தால் தாகம், அரிதாகம், குளிர்ஜுரங்கள், கண் வலி, கண்காசன், கண் படலம், மூக்கு வலி, மூக்கில் புண், மூக்கடைப்பு, கபால நீர், தலைக்கணம், தலைவலி இவையாவும் குணமாகும். தும்பைப் பூவின் மருத்துவப் பயனை அறிய கள ஆய்வு மேற்கொண்டபோது தும்பைப் பூவையும் இலையையும் எடுத்து தண்ணீரில் கொதிக்க வைக்கவும். பின்பு எரிகின்ற நெருப்பில் ஒரு செங்கலை இரண்டாக உடைத்து அந்த நெருப்பில் போட்டு சூடு படுத்தி அந்த கொதிக்கின்ற நீரில் போட்டு ஆவிபிடித்தால் “ஒற்றைத் தலைவலி” போய்விடும் என்று தகவலாளர் குறிப்பிட்டார்.

வாகைப்பூ

இரு இலக்கண நூல்களிலுள்ள புறத்திணையியலில் வாகைப் பூ எட்டாவதாக இடம்பெறுகின்றன. இப்பூ வெப்பமண்டலப் பகுதிகளில் நீண்ட காலம் மலரக்கூடியது. செம்மண், வண்டல் மண் மற்றும் களிமண் கலந்த மண்ணில் மார்ச் முதல் டிசம்பர் வரை மலர்கிறது. வாகைப் பூவை இன்று பேச்சு வழக்கில் "தூங்குமூஞ்சிப்பூ" என்று அழைக்கப்படுகின்றனர். வாகைப்பூவை ஆங்கிலத்தில் SIRIS என்றும் தாவரவியலில் ALBIZIA LEBBECK என்றும் அழைக்கப்படுகின்றனர். மூச்சுத் தொடர்பான நோய்களுக்கும், சளி, தோல்நோய், அக்கி நோய், பாம்புக்கடி, வாத நோய், கபம், பித்தம் போன்ற நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுத்துகின்றனர்.

"வாதசமனம் செய்யும் வல் விசத்தைப் போக்கிவிடும்
சீதசிலேத்மத்தைச் சிதைக்கும் காண் - போதவுள்ளே
மாகைப்பை வைத்திருக்கும் மாநிலத்திலேயே பெரிய
வாகைப்பூ தன்னை வழுத்து"

என்ற சித்தர் பாடல் வாகையின் சிறப்பைக் குறிப்பிடுகிறது.

பயன்படுத்தும் முறை

வாகைப்பூவைப் பொடியாகவும், பற்றுப்போட்டுப் பூசியும், பயன்படுத்தலாம். தேவையான அளவு வாகைப் பூக்களை உலர்த்தி இடித்து வைத்துக் கொள்ளவும். ஒரு தேக்கரண்டி தூளில் 2 தேக்கரண்டி தேன் கலந்து காலை உணவுக்கு முன் உட்கொள்ளவும். 20 நாட்கள் உண்ணவும். மூச்சுத் தொடர்பான நோய்களும், சளி போன்ற நோய்களும் குணமாகும்.

வாகைப்பூவை அரைத்துப் பூசினால் அக்கி நோய் தணியும். பூச்சாற்றில் மிளகை அரைத்துத்தரப் பாம்பு நஞ்சு நீங்கும். பூவைக் குடிநீர் செய்துதர வாத நோய்கள் நீங்கும். கபத்தையும் போக்கும். பூவை அரைத்து வெந்நீரில் தரப் பாம்பு விஷம் இறங்கும். கடிவாயிலும் பூசலாம். வாகைப் பூவை வீக்கம், பித்த தழும்புகளுக்கு அரைத்துப் பூசலாம்.

முடிவுரை

தொல்காப்பியர் காலகட்ட மக்கள் பயன்படுத்திய மலர்களைப் பற்றி தொல்காப்பியத்தின் வழி கட்டுரை ஆய்வுக்குட்படுத்தியுள்ளது. தொல்காப்பியர் சுட்டிய வெட்சி, கரந்தை, வஞ்சி, உழிஞை, தும்பை, காஞ்சி, வாகை நொச்சி முதலான மலர்கள் பல்வேறு திணைகளின் அடையாள மலர்கள் என்பதைக் கட்டுரை வெளிப்படுத்தியுள்ளது. வெட்சி முதலான மலர்களின் ஆங்கிலப் பெயருடன் அவற்றின் நோய்த்தீர்க்கும் தன்மையையும் எப்படி பயன்படுத்துவது என்பதையும் ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது. பல்வேறு திணைச் சார்ந்த மக்களின் நோயை நலப்படுத்தும் உயர்நிலை இருந்ததன் விளைவாகவே தமிழர் இம்மலர்களை அடையாளப்பூவாகச் சூடினர் என்பதை ஆய்வுப் புலப்படுத்தியுள்ளது. மேலும் இம்மலர்கள் அவர்கள் வாழ்ந்த சூழலில் வெகுவாக மலர்ந்திருந்தன

என்பதும் குறிப்பிடத்தக்கது. அடையாள மலர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது அவற்றுக்கான திணை என்னவென்பதையும் ஆய்வு சுட்டியுள்ளது.

துணை நூற்பட்டியல்:

1. தொல்காப்பியம் பொருளதிகாரம் , இளம்பூரணர், முதற்பதிப்பு -2008,3ம் பதிப்பு-2015, சாரதா பதிப்பகம், ஜி 4 சாந்தி அடுக்ககம், 3 ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை, சென்னை 600014.

2. புறப்பொருள் வெண்பாமாலை, புலியூர்க்கேசிகன், முதற்பதிப்பு- ஆகஸ்ட் 2009, 3ம் பதிப்பு- மே 2012, சாரதா பதிப்பகம், ஜி 4 சாந்தி அடுக்ககம், 3 ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை, சென்னை 600014.

3. தொல்காப்பியம், சொல்லதிகாரம், திருஞானசம்பந்தர், முதற்பதிப்பு ஜூன் 2013, கதிர் பதிப்பகம், திருவையாறு, தெற்கு வீதி, செல் : 9443190379.

References

1. *Ilampooranar (Ed.) – Tolkappiyam: Porulathikaram, Saradha Publishing House, G-4 Shanthi Apartments, 3 Sri Krishnapuram Street, Royapettah, Chennai 600014, 1st Edition – 2008, 3rd Edition – 2015.*

2. *Puliyur Kesikan – Purapporul Venba Malai, Saradha Publishing House, G-4 Shanthi Apartments, 3 Sri Krishnapuram Street, Royapettah, Chennai 600014, 1st Edition – August 2009, 3rd Edition – May 2012.*

3. *Thirugnanasambandhar – Tolkappiyam: Sollathikaram, Kathir Publishing House, South Street, Thiruvaiyaru, Mobile: 9443190379, 1st Edition – June 2013.*
4. இணையதளம் *hindu tamil Thisai (https://www.hindutamil . in*
5. இணையதளம் *facebook (https://www.facebook . com)*
6. இணையதளம் *(https : // Share . google/aimode/vy jijQF5aj 064Ar70)*
7. இணையதளம் *(https://share . google/aimode/YW VYMXET402x5d3pt)*

தகவலாளர் குறிப்பு

வ. எண்	பெயர்	வயது	ஊர்	படிப்பு	தொழில்	பாலினம்	இனம்
1	மல்லிகா	38	பல்லடம்	8	குடும்பத் தலைவி	பெண்	வலையர்
2	வீரம்மாள்	77	பல்லடம்	படிப்பில்லை	குடும்பத் தலைவி	பெண்	நாயக்கர்

Cite this Article in English

Karthickeyan.A, Manimegalai.R "Medicinal Perspectives on the Flowers Mentioned by Tolkappiyar" *MASIVAN : JOURNAL OF LANGUAGE AND LITERATURE STUDIES, ISSN: 3048-7854, Vol.3 Issue 2, July 2026, pp. 8-14*

3

கள்ளக்குறிச்சி வட்டாரத்தின் தெருக்கூத்து மரபுகள்

Therukoothu Traditions of the Kallakurichi Region

பிரதீபா.தி, ஜோதிமணி. இரா

தமிழ்த்துறை, பிஎஸ்ஜி.ஆர் கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, பீளமேடு, கோயம்புத்தூர் 641004.

Pradeepa.T, Jothimani R

Department of Tamil, PSGR Krishnammal College for Women, Peelamedu, Coimbatore- 641004

Orcid id: http://www.orcid.org/0000-0002-4754-6698

Orcid id: https://orcid.org/0009-0008-2788-2222

DOI: 10.5281/zenodo.21735715

Abstract

Koothu (dance-drama) truly belongs to folk culture. So whether we call them folk koothus or simply koothu, they are one and the same. The development of koothu is drama itself. It is often performed in the open spaces of villages, without any stage, hall, or such facilities. These koothus are not performed by the common folk themselves but are performed for the people — folk artists are the ones who perform these koothus. These can also be called village dramas.

"Village drama holds national importance. It is a key element of a country's cultural heritage, one that brings out the people's inner thoughts, character, art, culture, and way of life" — writes Thiru Su. Vidyanandan, elaborating on the characteristics of folk drama.

"The artists who perform koothus were also called koothadis (koothu performers)." There is also a saying that a koothadi looks to the east, while a hired laborer looks to the west. The reason is that koothus generally continue until dawn — this all-night performance is called kazhaikoothu. Performances like Kaniyan koothu, however, also take place during the day.

Among the artists, men generally took on the larger share. Men also took on the roles of women. Later, as koothus too were affected by the passage of time, women began to find a place in them as well. The performers drew their material for koothus both from Puranas and epics, and from the everyday lives of ordinary people.

Koothus with strict, planned, written formats are not common. They continue to exist mainly through oral tradition and memory. The form and content of koothus change depending on the gathered audience. Koothus also change according to the mental

state/mood of the performers.

Koothus are of many kinds. During the Sangam period, Kuravai koothu was widely prevalent. As offshoots of this, forms like Aychiyar Kuravai and Kunrak Kuravai flourished. The Silapathikaram mentions eleven types of koothu. Thus, many of the koothus mentioned in literature of that era have since gone out of practice.

In ancient times, there were war-related koothus such as Veri Kuravai, Thunangai, Veriyaattu, Velikoothu, Vazhpavai, and Thudikkoothu, performed in battlefield-like settings; religious/devotional koothus such as Kuravai, Thunangai, Veriyaattu, Kodukotti, Pandarangam, Valli Koothu, Ariya Koothu, and Pavai Koothu; and recreational/ entertainment koothus such as Thunangai, Valli Koothu, Ariya Koothu, Pavai Koothu, and Kurrak Koothu. Many of these have faded away and vanished over time, though a few can still be seen today.

These can broadly be divided into two categories: those based on storytelling, and those that showcase physical skill/performance. Among the story-based koothus, they can further be divided into koothus performed by humans and koothus performed by puppets.

Human koothus (Manidha koothu): examples include Therukoothu, Kaniyan koothu, and Dappankoothu. Puppet koothus (Bommai koothu): examples include Thol Paavai koothu (leather shadow puppetry) and Bommalaattam (string puppetry).

ஆய்வுச் சுருக்கம்

கூத்து என்பதுவே நாட்டுப்புறத்திற்குரியது தான். எனவே நாட்டுப்புறக் கூத்துகள் என்றாலும் கூத்து என்றாலும் ஒன்றுதான். கூத்தின் வளர்ச்சி தான் நாடகம். அரங்கம், அவை, எதுவுமில்லாமல் கிராமங்களின் திறந்த வெளிகளில் இது நடத்தப்படுவது உண்டு. இக்கூத்துகள் நாட்டுப்புற மக்களை நிகழ்த்தாமல் மக்களுக்காக நிகழ்த்தப்படுவது, நாட்டுப்புறக் கலைஞர்களே இக்கூத்துக்களை நிகழ்த்துகிறார்கள். இவற்றை கிராமிய நாடகங்கள் என்றும் அழைக்கலாம்.

“கிராமிய நாடகத்திற்குத் தேசிய முக்கியத்துவம் உண்டு. அது நாட்டின் கலாச்சார பாரம்பரியத்தின் முக்கிய அம்சம், நாட்டு மக்களின் உள்ளக் கருத்து, குணச் சிறப்பு, கலை, பண்பாடு, வாழ்க்கை முறை முதலியவற்றை எடுத்து விளங்குவது அக்கலை” என்று நாட்டுப்புற நாடகத் தன்மைகளைப் பற்றி விரித்துரைக்கிறார் திரு. சு. வித்தியானந்தன்.

“கூத்துகளை நிகழ்த்தும் கலைஞர்களைக் கூத்தாடிகள் என்றும் அழைத்தனர்”. கூத்தாடி கிழக்கே பார்ப்பான், கூலிக்காரன் மேற்கே பார்ப்பான் என்று ஒரு பழமொழியும் உண்டு. காரணம், கூத்துகள் பொதுவாக விடியும் வரை நடைபெறுவது தான் கிராமக் கூத்து. கணியான் கூத்துப் போன்றவை பகலிலும் நடைபெறுவதுண்டு.

கலைஞர்களில் பொதுவாக ஆண்களே அதிகப் பங்கு பெற்றனர். பெண்களின் வேடத்தையும் ஆண்களே போட்டுக் கொண்டனர். பின்னர்க் கூத்துகளும் காலத்தின் வளர்ச்சியால் பாதிக்கப்பட்டது போலும், பெண்களும் இடம்பெற ஆரம்பித்தனர். கூத்துகளுக்கான கருத்துக்களை இவர்கள் புராண இதிகாசங்களில் இருந்தும், பொதுமக்களின் வாழ்வில் இருந்தும் எடுத்துக் கொண்டனர்.

கட்டுப்பாடான திட்டமிட்ட எழுத்து வடிவுடைய கூத்துகள் அதிகமில்லை. நெஞ்சிலும் நாவிலுமே தங்கள் வாழ்வை நடத்தி வருகின்றன. கூடுகின்ற கூட்டத்தைப் பொறுத்துக் கூத்துகளின் வடிவமும், கூற்றுகளும் மாறுகின்றன. கூத்தாடிகளின் மன நிலைகளுக்கு ஏற்பவும் கூத்துகள் மாறுவதுண்டு.

கூத்துகள் பல வகைப்படும் சங்க காலத்தில் குரவைக் கூத்து பெருவழக்காக விளங்கி வந்தது. இதன் கிளையாக ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை போன்றவை திகழ்ந்தன. சிலப்பதிகாரம் பதினொருவகைக் கூத்துக்களைக் கூறுகின்றது. இவ்வாறு இலக்கியங்கள் கூறும் அன்றைய கூத்துகளில் பல வழக்கொழிந்து விட்டன.

பழங்காலத்தில் வேறிக்குரவை, துணங்கை, வேறியாட்டு, வேளிக்கூத்து, வாழ்பறை, துடிக்கூத்து, சூரல் நிலை போன்ற போர்க்கூத்துகளும்; குரவை, துணங்கை, வேறியாட்டு, கொடுகொட்டி, பாண்டரங்கம், வள்ளிக் கூத்து, ஆரியக்கூத்து, பாவைக்கூத்து போன்ற சமயம் தழுவிய கூத்துகளும்; துணங்கை, வள்ளிக்கூத்து, ஆரியக் கூத்து, பாவைக்கூத்து, குரற்கூத்து போன்ற பொழுதுபோக்குக் கூத்துகளும் இருந்திருக்கின்றன.

இவற்றில் பல தேய்ந்தும் மாய்ந்தும் போயின. கதைத் தழுவியவை என்றும், உடல் திறமையை வெளிப்படுத்துபவை என்றும் இரண்டாகப் பகுக்கலாம். கதை தழுவியவற்றில் மனிதர்களின் கூத்து என்றும், பொம்மைகளின் கூத்து என்றும் பகுக்கலாம். தெருக்கூத்து, கணியான் கூத்து, டப்பாங்கூத்துப் போன்றவை மனிதக் கூத்து; தோல் பாவைக் கூத்து, பொம்மலாட்டம் போன்றவை பொம்மைக் கூத்துகள்.

Keywords: *Therukoothu (Street Theatre), Musical Composition/Arrangement, Koothu Structure/ Format, Festival, Rhythms/Talas.* தெருக்கூத்து,இசை அமைப்பு, கூத்து அமைப்பு முறை, திருவிழா, தாளங்கள்.

முன்னுரை

தெருக்கூத்து என்பது தமிழ்நாட்டில் பிரபலமான ஒரு நாட்டுப்புற கலை வடிவம். இது ஒரு வகையான நடனம்; இதில் கலைஞர்கள் தெருக்களில் நடனமாடி, பாடி, வாசித்து, கதைகளைச் சொல்கிறார்கள்.

தெருக்கூத்துக் கலைஞர்களின் வாழ்க்கை முறை, தெருக்கூத்துக் கலைஞர்களின் கலை மற்றும் கலாச்சாரம், தெருக்கூத்துக் கலைஞர்களின் சமூக, பொருளாதார மற்றும் கலாச்சார நிலைகளை வெளிப்படையாக விளக்குகின்றன. தெருக்கூத்துக் கலைஞர்கள் தெருக்களில் நடனமாடி, பாடி, வாசித்து, கதைகளைச் சொல்கிறார்கள். அவர்கள் தங்கள் கலையை வெளிப்படுத்துவதற்காக பல்வேறு வகையான கருவிகளைப் பயன்படுத்துகிறார்கள்.

தெருக்கூத்து

தெருவில் நிகழ்த்தப்படும் கூத்து தெருக்கூத்தாகும். அதற்கு மேடையும் திரையும் கிடையாது. மக்களுக்கு நடுவே தெருக்களில் ஒப்பனையுடன் ஆடிப் பாடிச் செல்வதுண்டு. “தெருக்கூத்து என்பது நாடோடிக் கூத்து வகையைச் சார்ந்தது. நாடக மேடையோ காட்சித் திரைகளோ இல்லாமல் எளிய முறையில் தெருவிலும் திறந்த வெளிகளிலும் இக்கூத்து பெரும்பாலும் இரவு நேரங்களில் நடைபெறும்” என்று தமிழ்க் கலைக்களஞ்சியம் கூறுகிறது.

தெருக்கூத்தின் கருக்களைக் கலைஞர்கள் புராண இதிகாசங்களில் இருந்தே பெற்றுக்

கொள்கிறார்கள். பாரதக் கதைகள், இராமாயணக் கதைகள், அரிச்சந்திரன் கதை, வள்ளியம்மாள் கதை ஆகியவை இக்கலைஞர்களால் நடிக்கப்படும். ஆடலும் பாடலும் கூத்தின் முக்கிய அம்சங்கள் ஆக, இவர்களின் கவிதைகள் இதிகாசம், பக்தி, கலப்பு, வரலாறு, இனச்சார்பு, நவீனம் என ஆறு வகையாக அமையும்.

"கட்டை கட்டியாடும் கூத்து என்ற பெயரில் இன்றும் கட்டைகளாலாகிய அணிகலன்களுடன் ஆடியும் பாடியும் நடத்தப்படும் கிராமிய நாடகமே தெருக்கூத்து" என்பார் டாக்டர் அ. அறிவுநம்பி.

பொதுவாகத் தமிழகத்தின் வடமாவட்டங்களில் தெருக்கூத்து நடைபெறுகின்றது. கிராமக் கோவில்களில் பங்குனி மாதம் தொடங்கி ஆடி வரையில் நடைபெறும். குறிப்பாக பாரதக் கூத்தானது திரௌபதி அம்மன் கோவிலருகில், திறந்தவெளிகளில் நிகழும். கொஞ்சம் மேட்டுப் பகுதியில் கம்பங்களை நட்டு, விளக்குகளைக் கட்டிக் களரியை உருவாக்குவர். ஒரு பெஞ்சின் மீது இசைக் கலைஞர்கள் அமர்ந்திருப்பர். மூன்று பக்கங்களிலும் பார்வையாளர்கள் அமர்ந்திருப்பர். களரி கட்டி, கட்டியங்காரன் அறிமுகம் செய்ய இரவு பத்து மணி வாக்கில் தொடங்கும் தெருக்கூத்து விடிய விடிய நடைபெறும்.

தெருக்கூத்து தமிழ்நாட்டின் கிராமிய அரங்கக் கலை. உண்மையில் இதுதான் தமிழ் அரங்கக் கலையாக இருந்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. கண் முன்னே பிரமாதமான வடிவில் கூத்து இருந்து கொண்டிருக்கிறது. உண்மையில் பல திசைகளில் உத்வேகம் அளிக்கக்கூடிய சக்தியைக் கொண்டுள்ளது கூத்து என்பார் ந. முத்துசாமி.

இன்றைய இலக்கியங்கள் உளவியல் கோட்பாடு மனித நடத்தை மற்றும் மனத்தின் செயல்முறைகளைக் கணிப்பதற்கும், விளக்குவதற்குமான கட்டமைப்புகளாகத் திகழ்கின்றன. சிக்கலான உளவியல் நிகழ்வுகளைப் புரிந்து கொள்வதற்கு, கோட்பாடு ஒரு தெளிவை வழங்குகிறது. நடத்தை, எண்ணங்கள், உணர்ச்சிகளைப் புரிந்துகொள்வதற்கு முறையான கட்டமைப்பை வழங்குவதால், அவற்றின் உதவியுடன் மனித அனுபவங்களின் பரந்த பன்முகத்தன்மையை நன்கு விளங்கிக்கொள்ள முடிகின்றது. தற்காலப் பெண்ணிய எழுத்தாளர்களுள் குறிப்பிடத்தக்கவரான, பெண்களின் உளவியல் அனுபவங்களை ஆழமாக வெளிப்படுத்திய கே.ஆர்.மீராவின் படைப்புகள் தமிழில் பேராசிரியர் முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியம் மற்றும் பேராசிரியர் முனைவர் மோ.செந்தில்குமார் ஆகியோரால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இப்புதினங்கள் மனித மனத்தின், குறிப்பாகப் பெண்களின் சிக்கல்களை ஆழமாகப் பதிவு செய்கின்றன. சமூகக் கட்டுப்பாடுகள், தனிமை, காதல், நினைவுகள், வலிகள் ஆகியவை மனித மனத்தில் ஏற்படுத்தும் தாக்கங்களை வெளிப்படுத்துகின்றன. கே.ஆர்.மீராவின் மீராசாது என்ற தமிழ் மொழிபெயர்ப்பு புதினத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ள சிக்கலான உணர்வுகளை உளவியல் அறிஞர் சிக்மண்ட் ஃபிராய்டின் நடத்தைக் கோட்பாட்டின் அடிப்படையில் குறிப்பாக 'மனநிலைப் பிறழ்வு' எனப்படும் மனநோய் வெளிப்படும் நிலையை ஆராய்ந்து விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

உளவியல்

உளவியல் என்பது மனித உள்ளத்தின் தன்மைகளை எடுத்து விளக்கும் துறையாகும். சைக்கி (Psyche), லோகஸ் (Logos) எனும் இரு கிரேக்கச் சொற்களும் இணைந்து 'சைக்காலஜி' (Phychology) என வழங்கப்படுகிறது. உளவியலைக் குறிக்கின்ற 'சைக்காலஜி' எனும் ஆங்கிலச் சொல் கிரேக்க மொழியிலிருந்து பெறப்பட்டதாகும். 'சைக்கி' என்பது மனத்தை அல்லது ஆன்மாவைக் குறிக்கின்ற கிரேக்கச் சொல். தமிழ் இலக்கியத்தில் மனிதர்களின் அக மற்றும் புற உணர்வுகள் உடம்பின் மூலம் வெளிப்படுகின்றன என்பதைத் தொல்காப்பியர்,

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்ற
அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப" **(தொல்.பொருள்.மெய்பாட்டியல்-252)**

என்று தொல்காப்பியப் பொருளதிகார மெய்ப்பாட்டியல் நூற்பாவில் கூறியுள்ளார். மெய்ப்பாடு என்பது உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிகள் உடலின் புற அடையாளங்களாக வெளிப்படும் நிலையைக் குறிக்கிறது என்று தொல்காப்பிய உரையாசிரியர் இளம்பூரணர் விளக்குகின்றார்.

பழங்காலத்திலிருந்தே மனிதன், தன் உடலுக்குள் ஆன்மா என்ற ஒன்று இருப்பதாகவும், இவ்வான்மா உடலைச் செயற்படுத்துவதாகவும் கருதினர். இவ்வான்மாவின் பண்புகளையும், செயல்களையும் ஆராயும் துறையாக உளவியல் தோன்றியது. உளவியல் என்பது தத்துவத்தின் ஒரு

பிரிவாக இருந்தது. அதற்குப் பின்னர், உளவியல் தனித்த துறையாக வளர்ச்சி பெற்றது. அரிஸ்டாட்டில் என்ற தத்துவ அறிஞர் எழுதிய 'ஆன்மாவின் இயல்புகள்' என்ற நூலே உளவியல் பற்றி எழுந்த முதல் நூலாகும். பல அறிஞர்கள் 'ஆன்மா', 'உள்ளம்' பற்றி பல நூல்களை எழுதியுள்ளனர். பண்டையக் காலத்தில் உளவியல் நூல்கள் பல பெயர்களைத் தாங்கி வந்தன. அறிவியல் முறைப்படி மன அமைப்பின் செயல்கள் பற்றிக் கருத்துக்களை வெளியிட்டவர் 'தேகார்ட்டே' என்னும் பிரெஞ்சு தத்துவ அறிஞர் ஆவார். 'உளவியல்' அல்லது 'சைக்காலஜி' என்ற பெயரை முதன் முதலாகத் தம் நூலுக்கு அமைத்தவர் 'குளோகல்' என்பவராவார். இவர் பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

உளவியல் ஆராய்ச்சி ஆன்மா பற்றியதாக இருக்க முடியாது எனக் கருதி 'ஆன்மா' என்னும் ஒன்று இல்லையென பலர் கூறினர். சிலர் 'உள்ளம்' அல்லது மனத்தின் செயல்களை விளக்கும் இயல் உளவியலாகும் என விளக்கினர். உயிர்களின் அறிவுநிலையை, அதற்கான உறுப்புகளை வரிசைப்படுத்திய தொல்காப்பியர்,

"ஆறறிவதுவே அவற்றொடு மனனே" **(தொல் – பொரு. மரபியல் – 27)**

என்று கூறியுள்ளார். ஆறாவது அறிவாக மனம் செயல்படுகிறது என வரையறை செய்கிறார். இக்கருத்து இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலம் வரை பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் உளவியலில் உளப் பகுப்புக் கோட்பாடு மனிதனது நடத்தைகளுக்கும் செயல்களுக்கும் முக்கியக் காரணங்களாக அமைபவை நனவிலி உள்ளத்தில் உறையும் நோக்கங்களேயாகும். இந்நோக்கங்கள் நனவு உள்ளத்தில் உறையும் நோக்கங்கள் அல்ல என்கின்றார் சிக்மண்ட் ஃபிராய்டு. ஆகவே இன்றைய உளவியலறிஞர்கள் உளவியலை மனித 'நடத்தையை' (Behaviour) ஆய்வு செய்யும் அறிவியல் துறையாக வரையறுக்கின்றனர்.

உளவியல் அறிஞர் சிக்மண்ட் ஃபிராய்டு

அறிவியல் அடிப்படையில் உளவியல் தொடங்கப்பட்ட காலம் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி எனலாம். சோன்சு முல்லர், வெபர், எம் கோல்டு, பெச்சினர், வில்கம் உண்ட், பிரான்சிஸ் கால்ட்டன் போன்றவர்கள் உளவியலை அறிவியல் பாதைக்கு அழைத்துச் சென்ற முன்னோடிகளாவர். அரிஸ்டாடில் தொடங்கி வைத்த உளவியல் துறை பிரான்ஸிஸ் கால்டன் என்பவரால் ஒரு துறையாக அமைக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது. வில்லியம் ஜேம்ஸ் என்பவர் இருபதாம் நூற்றாண்டு உளவியலின் தந்தை எனப்படுகிறார். இவரைத் தொடர்ந்து சிக்மண்ட் ஃபிராய்ட் மன எழுச்சி பற்றிய ஆய்வினைத் தொடர்ந்தார். ஃபிராய்ட் தான் முதன் முதலில் உணர்வுகள் பற்றியும், நரம்பு மற்றும் கனவு பற்றிய ஆய்வையும் மேற்கொண்டார். ஃபிராய்டினுடைய ஆய்வு செல்வாக்கு பெற்றதாகக் கருதப்பட்டது.

ஆஸ்திரியா நாட்டைச் சார்ந்த ஃபிராய்டு வியன்னா பல்கலைக்கழகத்தில் மருத்துவ மாணவனாகச் சேர்ந்து புகழ்பெற்ற பாரிசின் சார்காட் என்பவரிடம் பயிற்சி பெற்றார். பின்னர் ஜோசப் புருவரின் தொடக்க ஆய்வுகளை விரிவுபடுத்தி, மன நிலை அலசல் என்ற புதிய ஆய்வு முறையைக் கண்டறிந்தார். இவருடைய ஆய்வு முறை ஃபிராய்டியம் (Freudianism) என்று அழைக்கப்படுகிறது. இவரது உளவியற் கொள்கைகள் கலை, இலக்கியம், சமூகம், அறிவியல் ஆகிய எல்லாத் துறைகளுக்கும் பொருந்தின. இவர் உளவியலறிஞராக மட்டுமன்றி இலக்கிய வாதியாகவும் திகழ்ந்துள்ளார்.

"*Psychoanalysis is the name of a procedure for investigation of*

mental processes which are almost inaccessible in any other way" - சிக்மண்ட் ஃபிராய்டு

வேறு எந்த வகையிலும் அணுக முடியாத மனச் செயல்முறைகளை ஆராய்வதற்கான ஒரு செயல்முறைக்கு உளப்பகுப்பாய்வு என்று பெயர் என ஃபிராய்டு கூறுகிறார். சிக்மண்ட் ஃபிராய்டு மனத்தின் இயல்பு, பாகுபாடு, செயற்பாடு எனும் நிலைகளில் ஆராய்ந்து, உளவியலாய்வுக்கு அறிவியல் நிலையினை அளித்தவர் ஆவார். உளப்பகுப்பாய்வில் நனவுக்கும் நனவிலிக்கும் இடையிலான உறவுமுறைகளை இயங்கியல் ரீதியில் ஃபிராய்ட் விவரிக்கிறார். நனவு, நனவடங்கு, நனவிலி, இட், ஈகோ, சூப்பர் ஈகோ ஆகியவை ஏற்படுத்துகின்ற உள இயக்கங்களே ஃபிராய்டிய இயங்கியலாகும்.

உளப்பகுப்பாய்வு என்பது ஒருவரின் சொற்கள், செயல்கள், மனக்காட்சிகள் ஆகியவற்றில் புதைந்து கிடக்கும் மறைமுகமான பொருளை, உண்மையான பொருளை வெளிக் கொணர்வதையே நோக்கமாகக் கொண்ட ஓர் அறிவியல் ஆய்வு முறையாகும். ஃபிராய்டின் கருத்துப்படி, மனித மனம் மூன்று நிலைகளைக் கொண்டதாகக் கருதப்படுகிறது. அவை,

1. நனவு மனம் (Conscious mind)

நனவு மனத்திற்கு முந்தியநிலை

2. நனவு அடங்கு மனம் (Subconscious mind)

3. நனவிலி மனம் (Unconscious mind)

என்பனவாகும். ஆழ்மனத்தில் அடக்கப்பட்டுப் புதைந்து கிடக்கும் நிறைவேறாத ஆசைகள் கனவுகளாக வெளிவருகின்றன.

ஃபிராய்டின் கருத்துப்படி, கலைஞனின் படைப்பாக்கம் ஒரு வகையான பகற்கனவாகக் கருதப்படுகிறது. மனித மனத்தைப் பிரித்தது போன்றே மனித ஆளுமையையும் (Personality) பகுத்துக் காட்டுகிறார். அவை,

1. உணர்வு உந்துதல் உடைய அடிநிலை (Id)

2. நான் எனும் தன் முனைப்பு (Ego)

3. மேனிலையாக்கம் கொண்ட தன் முனைப்பு (Super Ego)

என்பவனவாகும்.

சிக்மண்ட் ஃபிராய்டின் மனோதத்துவக் கோட்பாட்டின்படி, மனிதனின் ஆளுமை என்பது இட் (Id), ஈகோ (Ego), சூப்பர் ஈகோ (Superego) என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டது. இவை மனிதனின் எண்ணங்களையும் செயலையும் தீர்மானிக்கின்றன. இட்(Id) ஆசை மற்றும் தூண்டுதலுக்கான காரணியாகச் செயல்படுகின்றன. இது பிறக்கும்போதே மனிதனிடம் இருக்கும் அடிப்படை மனம். எதையும் உடனே பெற வேண்டும் என்ற ஆசையைக்கொண்டு காணப்படும். பசி, காமம், கோபம் போன்ற அடிப்படை உணர்ச்சிகளால் இட் இயங்குகின்றது. ஈகோ(Ego) இது இட் மற்றும் சூப்பர் ஈகோ ஆகியவற்றுக்கு நடுவில் நடுவராகச் செயல்படும். யதார்த்த உலகச் சூழலைப் புரிந்து கொண்டு ஆசைகளைச் சரியான நேரத்தில், சரியான முறையில் நிறைவேற்ற முயலுகின்றது. சூப்பர் ஈகோ(Superego) மனசாட்சியாக செயல்படுகின்றது. இது சமூகத்தின் ஒழுக்க நெறிகளையும் சட்டங்களையும் பின்பற்றும் பகுதியாக விளங்குகின்றது. தவறு செய்யும்போது குற்ற உணர்வைத் தருவதாகவும், மிகச் சரியாக இருக்க வேண்டும் என்று விரும்புவதாக உள்ளது.

இவ்வாறாக ஃபிராய்டு தன் உளவியல் கோட்பாட்டினை அறிவியல் நிலையில் நிலைநிறுத்தியுள்ளார்.

கே.ஆர் மீரா புதினங்களில் உளவியல்

சமகால மலையாள இலக்கியத்தில் குறிப்பிடத்தக்க பெண் எழுத்தாளர் மற்றும் பத்திரிக்கையாளர்களுள் ஒருவராக கே.ஆர்.மீரா திகழ்கிறார். கேரள மாநிலம் கொல்லம் மாவட்டத்தில் 1970-ல் பிறந்த மீரா, ஆரம்பத்தில் பத்திரிகையாளராகத் தனது எழுத்துப் பயணத்தை தொடங்கி, பின்னர் முழுநேர எழுத்தாளராக இயங்கத் தொடங்கினார். கே.ஆர்.மீரா 2001-ல் தனது புனைகதை எழுதும் பயணத்தைத் தொடங்கினார். அவரது முதல் சிறுகதைத் தொகுப்பான 'ஓர்மயூடே ஞாராம்பு' 2002-ல் வெளியிடப்பட்டு எழுத்துப் பயணத்தில் அடித்தளமிட்டது. இவர் புதினங்கள், குறுநாவல்கள், சிறுகதைத் தொகுப்புகள், சிறுவர் புதினங்கள் மற்றும் கட்டுரைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். மீராவின் படைப்புகள் பெரும்பாலும் அடையாளம், பாலினம் மற்றும் சமூக நெறிகள் போன்ற சிக்கலான கருப்பொருள்களை ஆராய்கின்றன. அவர் பல முக்கியமான இலக்கிய விருதுகளையும், விமர்சகர்களின் பாராட்டுககளையும் பெற்றுள்ளார். புதினங்கள், சிறுகதைகள், கட்டுரைகள் மற்றும் திரைக்கதைகள் எனப் பல பரிமாணங்களில் தனது முத்திரையைப் பதித்துள்ளார். இவரது புதினங்கள் பெண்ணுரிமை, சமூக அநீதி மற்றும் அரசியல் சார்ந்த சிக்கல்களை மையமாகக் கொண்டு பேசப்படுகின்றன. கே.ஆர்.மீராவின் புதினங்களில் பெண்களின் உணர்வுகள், ஏக்கங்களையும் சமூகம் மற்றும் குடும்ப அமைப்பில் பெண்கள் சந்திக்கும் இரட்டைச் சுமையையும், அதிலிருந்து அவர்கள் மேற்கொள்ளும் மௌனப் புரட்சியையும் தனது எழுத்துக்களில் பிரதிபலிக்கின்றார்.

சாதி, ஆணாதிக்க சமூகம் மற்றும் மரபு சார்ந்த தொழில்களில் பெண்களின் ஒடுக்குமுறையைப் பேசும் புகழ்பெற்ற ஆராச்சார் எனும் புதினத்திற்கு கேரள சாகித்ய அகாடமி மற்றும் கேந்திர சாகித்ய அகாடமி விருதுகளைப் பெற்றுள்ளார். ஜே.தேவிகா என்பவர் இப்புதினத்தை "தி ஹாங் வோமன்" என்ற தலைப்பில் ஆங்கில மொழியில் மொழிபெயர்த்தார். ‘அந்த மரத்தையும் மறந்தேன் மறந்தேன் நான்’ எனும் புதினத்தைக் கவிஞர் சிற்பி பாலசுப்ரமணியம் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். ஆராச்சார், கபர், யூதாஸின் நற்செய்தி, மீராசாது, சூரியனை அணிந்த ஒரு பெண், தேவதையின் மச்சங்கள், கருநீலம் ஆகிய நூல்களை மொழிபெயர்ப்பாளர் மோ.செந்தில்குமார் மொழிபெயர்த்துள்ளார். கே.ஆர். மீரா நான்கு தொலைக்காட்சித் தொடர்களுக்குத் திரைக்கதை எழுதியுள்ளார். "ஒரே கடல்" என்ற படத்திற்குத் திரைக்கதை எழுதியுள்ளார். இதற்கு தேசியத் திரைப்பட விருதைப் பெற்றார்.

புதினங்களில் படைக்கப்படுகின்ற கதை மாந்தர்கள் அனைவரும் சமுதாயத்தில் பல்வேறு மனநிலைகளை உடையவர்களாக இருக்கின்றனர். இவர்களின் அக, மன உணர்வுகளையும், போராட்டங்களையும் புதினத்தைப் படிப்பதன் மூலம் அறிய முடிகிறது. தமிழ்ப் புதினங்களில் தொடக்க காலக் கட்டங்களில் நிகழ்ச்சி சித்திரிப்புகள் அதிகமாக இருந்தன. பின்னர் நிகழ்ச்சிச் சித்திரிப்புகள் குறைந்து பாலியல் சிக்கல்கள் நிறைந்த மனப்போராட்டங்கள், மன உணர்வுகள், உளவியல் சிக்கல்கள் ஆகியவற்றை மையமாக வைத்துப் புதினங்கள் வெளிவந்தன. சமுதாயச் சிக்கல்களைப் பேசும் சமுதாய புதினங்களும் தோன்றின. உளவியலையும் சமூகச் சிக்கல்களையும் ஒருங்கிணைத்துப் பேசும் புதினங்கள் ஒப்பீட்டளவில் குறைவாகவே வெளிவந்துள்ளன.

மாந்தர்கள் அனைவரும் அவரது கற்பனையின் வெளிப்பாடே ஆவர். தீய மாந்தர்களும் இதனுள் அடங்குவர். புதின ஆசிரியர் நேரடியாக உளவியல் கோட்பாடுகளை விவாதிப்பதில்லை மாறாக, புதினத்தில் கதை மாந்தர்களின் மூலம் உணர்வுகள், மன எழுச்சிகள், ஆளுமைப் பண்புகள், விரக்திகள், ஆசைகள், கனவுகள், ஏமாற்றங்கள் முதலியவற்றைச் சித்தரிக்கின்றார். இதன் அடிப்படையில் கே.ஆர்.மீரா புதினத்தில் உளவியல் கூறுகள் மிகுதியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கதைமாந்தரின் உளவியல் பிறழ்வு

தமது புதினங்களில் சமூக உறவுகளை இழந்து விட்டவர்களையும், உலகியல் உறவுகளை நிராகரிக்கின்றவர்களையும் அதிக அளவில் கதை மாந்தர்களாகப் படைத்துள்ளார். அக்கதைகளில் அனைவரும் சராசரி வாழ்வில் இருந்து விலகி வாழ்பவர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். அதன் அடிப்படையில் சமூக வாழ்க்கையிலிருந்து உணர்வு ரீதியாக விலகிய மனநிலையுடையவராக, ஆன்மீக வாதியாக மாறி உலக உறவுகளை நிராகரிப்பவராக கே.ஆர். மீராவின் 'மீராசாது' புதினத்தில் வரும் துளசி கதாப்பாத்திரம் சித்திரிக்கப்பட்டுள்ளது.

கே.ஆர் மீராவின் மீராசாது புதினத்தில் காணப்படும் கதாப்பாத்திரங்களின் உளவியல் பிறழ்வுகளை மூன்று நிலைகளாக வகைப்படுத்தலாம். அவை,

1. இயல்பு நிலை கடத்தல்
2. அந்நியமாக்கப்படுதல்
3. குற்றவுணர்ச்சி

என்பவைகளாகும்.

1. இயல்பு நிலை கடத்தல்

மனிதர்களுடைய இயல்பு பிறழ்ந்த நடத்தையை அறியும் பொருட்டு உளவியலை அறிவியல் முறைப்படி உபயோகிக்கும் ஒரு துறை 'பிறழ்வியல் உளவியல்' ஆகும். பிறழ்வு என்ற சொல்லின் பொருளானது ஒரு வரையறை நிலை அல்லது ஒரு சராசரி நிலையிலிருந்து விலகிச் செல்வது ஆகும். இதை பெரும்பாலான மக்களுடைய நடத்தையிலிருந்து மாறுபட்டுக் காணப்படும் ஒரு நடத்தை எனக் கூறலாம். மனிதர்கள் அனைவரும் ஒரே மாதிரியான நடத்தை அல்லது ஆளுமைப் பண்புகளைக் கொண்டவர்களல்லர். மனிதர்களில் விருப்பங்கள், எண்ணங்கள், குறிக்கோள்கள், கற்பனைகள், ஆளுமைப் பண்புகள் முதலியவை மாறுபட்டுக் காணப்படுகின்றன.

இயல்பு நிலையிலுள்ள மனிதர்கள் தங்கள் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும், நடவடிக்கைகளையும், ஒரு சமூக வரையறைக்கு உட்படுத்திக் கொண்டு வாழ்கின்றார்கள். அவர்களுடைய சிந்தனையும், கற்பனையும் ஓர் எல்லைக்குள்ளே இருக்க வேண்டும். எல்லைகளைக் கடந்து வருவதில்லை. ஆனால் எல்லா மனிதர்களும் விதிகளுக்குள் அடங்குவதில்லை. இயல்பு நிலையிலிருந்து கடந்து சென்று தங்களை வேறுபடுத்திக் காட்டுகின்றனர். இவ்வாறு இயல்புநிலை கடந்த நிலைக்குச் சென்று விட்டவர்களை 'இயல் பிறழ்ந்தவர்கள்' எனக் கூறுவர்.

இயல்பிலிருந்து விலகிய நிலை (Abnormality) என்ற சொல் எதிர்மறையானதாகும். இயல் பிறழ்ந்தமை என்ற சொல்லையும், நோய் அல்லது பிணி என்ற சொல்லையும், ஒரே பொருள்படக் கொண்டு மனப் பிறழ்வு (Mental Abnormality) என்றும், மனநோய் (Mental Disease) என்றும் வழங்கப்படுகின்றன. "மாயிகரில் இருக்கும் பழுப்பேறிய அறையில் பலவிதமான உடைசலும் விரிசலும் நிறைந்த சுவர்களுக்கிடையில் துருப்பிடித்த கட்டிலில், கொடியில் கிடக்கும் ஈர நாற்றமடிக்கும் துணிகளுக்குக் கீழே தனித்துப் படுத்திருக்கும்போது, நான் பழைய சிரிப்புகளின் அலைகளை மீண்டும் கேட்டேன். ஒரு முட்டாள் பெண்ணின் சிரிப்புகள்." (ப.எண்-45, கே.ஆர். மீரா, மீராசாது, 2023)

மனநோய்க்கு அவரவர் சுற்றி உள்ள சூழலும் முக்கியப் பங்கு வகிக்கிறது. தன் இயல்பில்

இருந்து மீள முடியாத நிலைக்கு துளசி தள்ளப்பட்டு உள்ளார் என்பதை மேற்கண்ட உரையாடல் வழி அறிய முடிகிறது. மனிதனுக்கு வாழ்வில் ஏற்படும் பல்வேறு சிக்கல்களினால் அவனது உள்ளம் பாதிக்கப்படுகின்றது. மனிதனின் உள்ளம் பாதிக்கப்படும் பொழுது, உடலும் பாதிக்கப்படுகின்றது. எனவே மனநோய்க்கு ஆளாக வேண்டியச் சூழல் இதனால் உருவாகிறது. மனநலப் பிறழ்வுகள் உயிரியல், உளவியல், சமூகக் காரணிகளின் ஒருங்கிணைந்த தாக்கத்தால் உருவாகின்றன. சிக்மண்ட் ஃபிராய்ட் உருவாக்கிய உளப்பகுப்பாய்வு கோட்பாட்டின்படி, உளவியலில் 'இட்'(IT) என்பது ஃபிராய்டின் கோட்பாட்டின்படி மனிதனின் அடிப்படை உள்ளுணர்வுகள் மற்றும் மகிழ்வைத் தேடும் மனநிலையாகும். இது தர்க்கம், ஒழுக்கம், நல்லது-கெட்டது போன்ற எதையும் சிந்திக்காமல், தனக்குத் தேவையானதை அடைய வேண்டும் என்ற கொள்கையில் இயங்குகிறது. புற உலகுக்கும் இட்டுக்கும் பாலமான ஈகோ மெய்ம்மையுடன் கொண்ட உறவில் சச்சரவு ஏற்படாமல் 'இட்' கட்டளைக்கு ஏற்ப ஈகோ ஊசலாட வேண்டியுள்ளது. இதனால் 'இட்'டுக்கு ஏற்பத் தம்மை மீட்டுருவாக்கம் செய்து கொள்ள ஈகோ ஈடுபடுகிறது. இதுவே மனநோய்களுக்கான காரணமாக அமைகின்றது.

2. அந்நியமாக்கப்படுதல்

சிக்மண்ட் ஃபிராய்டின் அந்நியமாதல் (Alienation அல்லது Self-estrangement) என்பது சமூக விதிமுறைகளுக்கு ஏற்ப வாழ முயலும்போது, மனிதர்கள் தங்கள் உண்மையான சுயத்தை ஒடுக்குவதால் உருவாகும் உளவியல் முரண்பாட்டைக் குறிக்கும். மனத்தின் நனவிலி (Unconscious) பகுதிக்கும், சமூகத்தின் கட்டுப்பாடுகளுக்கும் இடையே நடக்கும் போராட்டமே இதன் முக்கிய காரணமாகும். “நான் ஒரு மரமானால், சபித்துக்கொண்டே பூக்கவும் பிடிவாதத்துடன் இலையுதிர்க்கவும் செய்வேன். என்னுடைய மலர்களில் விஷத்தை நிறைப்பேன். அதைக் குடித்து வண்டுகளும் பட்டாம்பூச்சிகளும் சருகோடு சருகாக உதிரும். அடுத்த பிறவியிலும் நான் எல்லாவற்றையும் அழிப்பேன்.” (ப.எண்-33, கே.ஆர்.மீரா, மீராசாது, 2023)

இந்த உரையாடலின் வழி கதாபாத்திரத்தின் அந்நியமாதல் உணர்வையும், சமூகத்திலிருந்து மனரீதியாக விலகும் நிலையையும் அறியமுடிகிறது. தன் குடுபத்தினருக்கும் குழந்தைகளுக்கும் இழைத்த அநீதிக்கு கைமாறாக தன்னைத் தானே அழித்துக் கொள்ளும் மனநிலையாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டும். எண்ணங்களில், செயல்களில், உணர்ச்சிகளில், மாறுபாடுகள் உண்டாகி மனித மனம் குழப்பமடைந்த நிலையில் மனநோய்க்கு ஆளாகின்ற நிலை வருகின்றது. தமிழ்ப்புதின எழுத்தாளர் சு.வெங்கடேசன், 'மனித உறவுகள் மனதின் பிரதிபலிப்புகள்' (ப.எண்-277, சு.வெங்கடேசன், காவல் கோட்டம், 2008) எனக் கூறுகின்றார். இங்கு தாய்மை போன்ற பாச உணர்வுகள், துளசியின் மன அழுத்தத்தின் உச்சத்தில் மனப்பிறழ்வாக மாறுகின்றன. ஏனெனில் அவர் குழந்தைகளை ஏமாற்றப்பட்ட வாழ்வின் தொடர்ச்சியாக உணர்கின்றார்.

மனிதன் சமூகத்தில் வாழும்போது, தனது அடிப்படை இயல்பான ஆசைகளைச் (Libido) சமூகக் கட்டுப்பாடுகளுக்கு ஏற்ப மாற்றிக்கொள்ள அல்லது அடக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இந்த அடக்குமுறை (Repression), ஒருவரைத் தனது சுயவிருப்பத்தில் இருந்து அந்நியப்படுத்துகிறது. மனச் சிதைவு (Splitting Ego) சுற்றுச்சூழல் தரும் அழுத்தத்தால், மனித மனம் தனது நனவான எண்ணங்களுக்கும், நனவிலி ஆசைகளுக்கும் இடையே ஒரு முரண்பாட்டை உருவாக்குகிறது. இந்த பிளவுபடும் தன்மை, ஒருவரை தனக்குள்ளேயே ஒரு அந்நியராக உணர வைக்கிறது.

3. குற்றவுணர்ச்சி

உளப்பகுப்பாய்வில் ஆளுமைக் கோட்பாட்டின்படி எதிர்களின் இணைகள் (pairs of opposites) வரிசையில் வதைத்துறு மோகம் வதைந்துறு மோகம் என இருவகை உள்ளது. இது மோகத்திரிபுகளில்

அதிகமாகப் பேசப்படுகின்ற இணையாகும்.

- வதைத்துறுநிலை (Sadism)
- வதைந்துறுநிலை (masochism)

வதைத்துறு மோகமும், வதைந்துறு மோகமும் உள்ளத்தின் குணங்களாகும். வதைத்துறுநிலை என்பது பிறரைத் துன்புறுத்தி இன்பம் காண்கிற மனநிலையைக் குறிக்கும். வதைந்துறுநிலை என்பது பிறரால் துன்புறுத்தப்பட்டு இன்பம் காண்கின்ற மனநிலையைக் குறிக்கும். மற்றவருக்கு வலியை ஏற்படுத்தி இன்பம் காண்பது வதைத்துறு மோகமாகும். இச்செயலில் துன்பம் அல்லது வலி என்பது உடல் வலி, மன வலி ஆகிய இரண்டையும் குறிக்கும்.

"அழிப்பு அல்லது சிதைப்புத் தொழிலுக்கு மூர்க்க உணர்ச்சி (Aggression) அடிப்படையாக உள்ளது. மூர்க்க உணர்ச்சி சாவுணர்ச்சிகளில் ஒன்றாகும்." (ப.எண் – 424, சிக்மண்ட் ஃபிராய்டு, உளப்பகுப்பாய்வு அறிவியல், 2005) என்று ஃபிராய்டு முன்மொழிகின்றார்.

'சாவுணர்ச்சிகளில் ஒன்றான மூர்க்கம் (aggression) வதைத்துறு, வதைந்துறு மோகங்களில் வெளிப்படுகின்றன. மோகம் என்பது வாழ்வுணர்ச்சிகளில் ஒன்றாகும். மூர்க்கமோ சாவுணர்ச்சிகளில் ஒன்றாகும். எதிரும் புதிருமான இரண்டு உணர்ச்சிகள் இணைந்து வெளிப்படுவதை உள்ளுணர்ச்சிகளின் சேர்க்கை என்கிறார் ஃபிராய்ட்' (ப.எண் –363, சிக்மண்ட் ஃபிராய்டு, உளப்பகுப்பாய்வு அறிவியல், 2005). இதன்படி மூர்க்க உணர்ச்சித் தொடர்புடைய அழிப்பு உணர்ச்சியும் 'வதை மோகங்களில்' பங்கு கொள்கின்றது. அதாவது, புறநிலை அழிப்பின் வழியில் வதைத்துறு மோகமும் அகநிலை அழிப்பின் வழியில் வதைந்துறு மோகமும் நிகழ்கின்றன. இவ்விரண்டில் வதைந்துறு மோகத்தை முக்கிய ஆளுமைப் பண்பாக உளப்பகுப்பாய்வுக் காண்கிறது. துன்பங்களைக் கொடுத்து இன்புறுவது வதைத்துறு மோகத்தின் நோக்கமாக இருப்பதால் துன்பமும் இன்பமும் ஒரே இடத்தில் அமையப் பெற்றால் துன்பத்தைதான் வதைந்துறு மோகி தேர்வு செய்வார். "என் உடல் முழுதும் விஷம்தான். காதலின் விஷம். எனக்கு இறப்பதற்கு விருப்பம் இல்லாதிருந்தது. உயிரோடு இருக்க வேண்டும். புரையோடிப்போன புண் போன்று உயிர்த்திருக்க வேண்டும். பார்ப்பவர்களுக்கு வலிக்க வேண்டும்." (ப.எண் - 48, கே.ஆர்.மீரா, மீராசாது, 2023) என்ற உரையாடலின் வழி, துளசியின் வதைத்துறுநிலை (Sadism) மோகம் வெளிப்படுகின்றது.

மீராசாது புதினத்தில், துளசி என்ற பெண் திருமண வாழ்க்கையில் தன் கணவனால் ஏமாற்றப்பட்ட பின்பு, தனது இரு குழந்தைகளைக் கொலை செய்துவிட்டு, துறவுப் பாதையைத் தேர்வு செய்கிறார். இது ஒரு சாதாரண செயலாக அல்லாமல், மனச்சிதைவு (psychological breakdown) எனக் கருதப்படுகின்றது. அதாவது, அறியப்படாத மனம் (Unconscious) மனிதனின் நடத்தையையும் முடிவுகளையும் தீர்மானிக்கிறது. பொதுவாக வதைத்துறு மோகத்திற்குத் 'தண்டிப்பு வேட்கை' அடிப்படைக் காரணமாகும். ஒருவரிடம் தான் தண்டிக்கப்பட வேண்டும் என்கின்ற எண்ணம் உருவாவதற்குப் பிண்ணணியாகக் 'குற்றவுணர்வு' (quilt) அமைகிறது. நனவிலிக்குள் பொதிந்துள்ள உணர்வுகளில் குற்றவுணர்வும் ஒன்று என ஃபிராய்டு கூறுகின்றார். நனவிலி ஈகோவின் குற்றவுணர்வுக் காரணமாகத் தான் தண்டிக்கப்படவேண்டும் என்கிற வேட்கையைக் கொள்கிறது. இதற்கு சூப்பர் ஈகோவின் ஆதிக்கமே காரணமாகும். இட்டின் சில உந்தல்களைக் குற்றங்கள் என்று சூப்பர் ஈகோ சாடுவதால் அவ்வுந்தல்கள் நனவிலிக்குள் குற்றவுணர்வுகளாகப் பதிந்து விடுகின்றன. ஃபிராய்டு கூறும் மூர்க்கத்தின் அடிப்படையில், நீண்ட காலமாக அடக்கப்பட்ட உணர்வுகள் (repression) ஒரு கட்டத்தில் வெடித்து, அழிவின் வடிவமாக வெளிப்படுகின்றன.

முடிவுரை

கே.ஆர். மீராவின் மீராசாது புதினம் மனித மனத்தின் ஆழமான உளவியல் இயக்கங்களை யதார்த்தமாகப் பதிவு செய்யும் சிறந்த படைப்பாக அமைகிறது. மீராசாது புதினம் உளவியல் நிஜவாதம் மற்றும் பெண்ணிய சிந்தனைகளை ஒருங்கிணைக்கின்றன. இவை மனித மனத்தின் இருண்ட பகுதிகளையும், அதே சமயம் அதன் மீளுருவாக்கத் திறனையும் வெளிப்படுத்துகின்றன. இப்புதினத்தில் முதன்மைக் கதாப்பாத்திரமான துளசி எனும் பெண் தன்இயல்பு நிலையிலிருந்து கடந்து அந்நியமாக்கப்படுதல், தாழ்வு மனப்பான்மை நனவிலி மனத்தின் ஆதிக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் அழிவு (destruction) வழியைத் தேர்வு செய்கிறார். மனிதனின் வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்கள், வெறுக்கத்தக்கதான அனுபவங்கள் ஆகிய இவற்றை நனவு மனதிலிருந்து நசுக்கி, நனவிலி உள்ளத்திற்குத் தள்ளிவிடுவதால் மனதில் சிக்கல் ஏற்பட்டுத் துளசி மன நோயாளியாக மாறுகிறார். உள் மனப் போராட்டங்கள், குற்ற உணர்வையும், மன அழுத்தத்தையும் தீவிரமடையச் செய்து, இறுதியில் மனச்சிதைவு மற்றும் தன்னழிவு உந்துதல் போன்ற உளவியல் நிலைக்கு துளசி தள்ளப்படுகிறார். இதன்மூலம் மனித நடத்தையைத் தீர்மானிப்பதில் அறியப்படாத மனமும் உள்மனப் போராட்டங்களும் முக்கியப்பங்கு வகிக்கின்றன என்பதைக் கே.ஆர்.மீரா உளவியல் யதார்த்தவாதத்தின் வழி ஆழமாக வெளிப்படுத்தியுள்ளார். எனவே மீராசாது புதினம் உளவியல் அடிப்படையில் மனநோய்க்கான காரணங்களை வைத்து மனித மனத்தின் சிக்கல்களை நுட்பமாகப் பதிவு செய்கின்றது.

துணைநூற்பட்டியல்

1. சிக்மண்ட் ஃபிராய்ட், இரவிச்சந்திரன், தி.கு.,(மொ.பெ.), சிக்மண்ட் ஃபிராய்ட் உளப்பகுப்பாய்வு அறிவியல், அலைகள் வெளியீட்டகம், சென்னை – 89, ஆறாம் பதிப்பு-2022.

2. சிவலிங்கனார், அ., தொல்காப்பியம் பொருளதிகாரம் தொகுப்பும் குறிப்பும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 88, மு.ப.1994.

3. மீரா, கே.ஆர்., செந்தில்குமார், மோ.,(மொ.பெ.), மீராசாது, எதிர் வெளியீடு பதிப்பகம், பொள்ளாச்சி – 02, முதற்பதிப்பு 2023.

4. தமிழ்ச்செல்வன், சு.,காவல் கோட்டம், தமிழினி பதிப்பகம், சென்னை – 51, மு.ப. 2008.

References

1. *Meera, K.R., Senthilkumar, M., (T.), Meerasadhu, Edhir Veliyedu Publications, Pollachi – 02, 1st Edition 2023.*

2. *Sigmund Freud, Ravichandran, T.K., (T.), Sigmund Freud Psychoanalysis Science, Alaigal Publications, Chennai – 89, 1st Edition-2005.*

3. *Sivalinganar, A., Compilation and Notes on Tolkappiyam Poruladhikaram, World Tamil Research Institute, Chennai – 88, 1st Edition- 1994.*

4. *Tamizhchelvan, S., Kaval Kottam, Tamizhini Publications, Chennai – 51,1st edition – 2008.*

Cite this Article in English

Susmitha.K, Bhuvaneswari.C "The Psychological Dimensions of Meerasadhu Novel" *MASIVAN : JOURNAL OF LANGUAGE AND LITERATURE STUDIES, ISSN: 3048-7854, Vol.3 Issue 2, July 2026, pp. 54-62*

கணினிவிடு தூது நூலில் அழகியல் கோட்பாடுகள்

Principles of Aesthetics in Kaninividu thothu

10

வரலெஷ்மி.இரா
தமிழ்த்துறை, திருவள்ளுவர் கல்லூரி, விக்கிரமசிங்கபுரம், பாபநாசம் - 627 425.
Varalakshmi.R
Tamil Department, Thiruvalluvar College, Vickramasingapuram, Papanasam. 627 425

DOI: 10.5281/zenodo.21736843

Abstract

The minor literary work (Chitrilakkiyam) titled Kaninividu Thoodu (Parrot-turned-Computer as a Messenger), authored by poet Masivan, stands as an innovative creation that bridges the ancient messenger literary tradition (Thoodu Ilakkiyam) with modern technology. This study explores the aesthetic principles revealed in personifying a mechanical computer as a work of art and a close, dependable companion carrying a message.

Technological Aesthetics shines through as the author portrays the historical evolution of the computer—from the era of Charles Babbage to fifth-generation Artificial Intelligence—much like the narrative arc of an epic. Particularly in the traditional sections where the heroine's physical attributes are described from head to toe (Padathi Kesa), the poet upholds natural aesthetics by comparing her eyes to magnets and her hair to dark clouds.

The author's logical explanation of how the computer surpasses traditional messenger motifs—such as clouds, gentle breezes, and parrots—in speed, precision, and reliability serves as testimony to the work's comparative aesthetics. Furthermore, weaving the grammatical elements of the Tamil language—such as letters (Eluthu), words (Sol), and meaning (Porul)—with the operations of a computer demonstrates a rich linguistic aesthetics.

Finally, this article establishes how poet Masivan gracefully crafted the modern concept of "Computers everywhere, in everything" with literary taste, seamlessly blending interior emotions (Akam) with scientific advancement. Such an approach confirms Tamil literature's flexibility to adapt to changing times while preserving its timeless aesthetic values.

ஆய்வுச்சுருக்கம்

மசிவன் கவி இயற்றிய 'கணினிவிடு தூது' என்னும் சிற்றிலக்கியம், பழமையான தூது இலக்கிய மரபையும் நவீனத் தொழில்நுட்பத்தையும் இணைக்கும் ஒரு புதுமையான படைப்பாகத் திகழ்கிறது. இவ்வாய்வு, இயந்திரத் தன்மையுடைய கணினியை ஒரு கலைப்பொருளாகவும், தூது செல்லும் உற்ற தோழனாகவும் உருவகிப்பதில் வெளிப்படும் அழகியல் கோட்பாடுகளை ஆராய்கிறது. நூலாசிரியர் கணினியின் வரலாற்றுப் பரிணாமத்தை, சார்லஸ் பாபேஜ் காலம் முதல் ஐந்தாம் தலைமுறை செயற்கை நுண்ணறிவு வரை ஒரு காப்பிய வளர்ச்சியைப் போலச் சித்திரிப்பதில் தொழில்நுட்ப அழகியல் (Technological Aesthetics) மிளிர்கிறது. குறிப்பாக, தலைவியின் உறுப்புகளைப் பாதாதி

கேசமாக வர்ணிக்கும் மரபுசார்ந்த பகுதிகளில், கண்களைக் காந்தத்திற்கும், கூந்தலை மேகத்திற்கும் ஒப்பிடுவதன் மூலம் இயற்கை அழகியலை ஆசிரியர் நிலைநிறுத்துகிறார். மேகம், தென்றல், கிளி போன்ற பழைய தூதுப் பொருட்களை விடக் கணினி எவ்வாறு வேகத்திலும், துல்லியத்திலும், நம்பகத்தன்மையிலும் சிறந்தது என்பதைத் தர்க்கரீதியாக விளக்குவது நூலின் ஒப்பீட்டு அழகியலுக்குச் சான்றாகும். மேலும், தமிழ் மொழியின் எழுத்து, சொல், பொருள் ஆகிய இலக்கணக் கூறுகளைக் கணினியின் செயல்பாடுகளோடு பிணைத்துப் பாடியிருப்பது, மொழியியல் அழகியலை (Linguistic Aesthetics) வெளிப்படுத்துகிறது. இறுதியாக, அக உணர்வுகளையும் அறிவியல் வளர்ச்சியையும் ஒருசேரக் குழைத்து, 'எங்கும் கணினி எதிலும் கணினி' என்ற நவீனக் கோட்பாட்டை இலக்கிய நயத்துடன் மசிவன் கவி படைத்திருப்பது இக்கட்டுரையின் வாயிலாக நிறுவப்படுகிறது. இத்தகைய அணுகுமுறை, தமிழ் இலக்கியம் காலமாற்றத்திற்கு ஏற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்ளும் நெகிழ்வுத்தன்மையையும் அதன் மாறாத அழகியல் மதிப்பீடுகளையும் உறுதிப்படுத்துவதாக அமைகிறது.

Keywords: *Kaninividu Thoodu (Computer as a Messenger / Computer-Messenger Literature), Poet Masivan, Aesthetic Theory / Aesthetic Principle, Head-to-toe description (Padathi Kesa - a traditional literary convention describing a subject from feet to hair), Modern Technology, Chitrilakkiyam*, கணினிவிடு தூது, மசிவன் கவி, அழகியல் கோட்பாடு, பாதாதி கேசம், நவீனத் தொழில்நுட்பம், சிற்றிலக்கியம்.

முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் தூது என்பது அகப்பொருள் சார்ந்த ஒரு துறை. தலைவன் அல்லது தலைவி தன் காதலைத் தெரிவிக்கும் பொருட்டு அஃறிணைப் பொருட்களையோ அல்லது உயர்திணைப் பொருட்களையோ தூது விடுவது மரபு. மசிவன் கவி, இன்றைய உலகின் தவிர்க்க முடியாத அங்கமான கணினியைத் தூதுப் பொருளாக மாற்றியுள்ளார். "எங்கும் கணினி எதிலும் கணினி" எனப் போற்றி, அதனிடம் தன் காதலைத் தலைவியிடம் சேர்க்குமாறு வேண்டும் பாடல்களில் நவீன அழகியல் மிளிர்கிறது

கணினியின் பரிணாம மற்றும் உருவ அழகியல்

'கணினிவிடு தூது' நூலில், ஒரு இயந்திரத்தின் தொழில்நுட்ப வளர்ச்சியினை உலகு போற்றும் அழகியலாக மாற்றிக் காட்டியுள்ளார். பொதுவாகத் தூது இலக்கியங்களில் தூதுப் பொருளின் குலப்பெருமை பேசப்படும். இங்கு ஆசிரியர் கணினியின் "குலப்பெருமையாக" அதன் வரலாற்றுப் பரிணாமத்தை அழகியல் நோக்கில் விவரிக்கிறார்.

அ) வரலாற்றுப் பரிணாம அழகியல்

கணினி இன்று அடைந்துள்ள பிரம்மாண்ட வளர்ச்சிக்கு வித்திட்டவர்களை நன்றியோடு நினைவு கூர்வதே ஒரு தனி அழகியல் பண்பாகும். கணினியின் தந்தை சார்லஸ் பாபேஜ் (Charles Babbage) உருவாக்கிய அமைப்பை, "சார்லச்பாப் யேச்யாம் சதுரம்தான் உன்னமைப்பாம்" என்று பாடுகிறார். இது ஒரு இயந்திரத்தின் பிறப்பை இலக்கியப் பதிவாக்குகிறது. வெற்றிடக் குழாய்கள் (Vacuum Tubes) முதல் இன்றைய செயற்கை நுண்ணறிவு (AI) வரையிலான மாற்றத்தை ஆசிரியர் நுட்பமாகப் பதிவு செய்துள்ளார். ஒரு மனிதனின் வளர்ச்சி நிலைகளைப் போல, கணினியின் ஐந்து தலைமுறை மாற்றங்களையும் அதன் செயல்திறன் கூடிக்கொண்டே செல்வதையும் அழகியல் நயத்தோடு விளக்குகிறார்.

ஆ) உருவ மற்றும் வடிவ அழகியல்

கணினியின் புறத்தோற்றத்தை ஆசிரியர் வெறும் பிளாஸ்டிக் அல்லது உலோகப் பெட்டியாகப் பார்க்காமல், ஒரு கலை வடிவாகச் சித்தரிக்கிறார்.

"செவ்வகம், வட்டம், சதுரம்" எனப் பல வடிவங்களில் கணினி பரிணமிப்பதைக் குறிப்பிடுகிறார். இது "உருவ அழகியல்" (Visual Aesthetics) கோட்பாட்டின் கீழ் அமைகிறது. கணினியின் திரையில் (Monitor) தோன்றும் வண்ணங்களையும், தகவல்களையும் ஒரு ஓவியத்தைப் போலக் காண்கிறார். தலைவியின் முகப் பொலிவிற்கு இணையான ஒரு ஒளியைக் கணினியின் திரையில் அவர் தரிசிக்கிறார்.

இ) தொழில்நுட்பச் செயல் அழகியல்

இயந்திரத்தின் வேகம் என்பது அதன் அழகியல் பண்பாக இங்கு மாறுகிறது. நொடிப்பொழுதில் கணக்கீடுகளைச் செய்யும் அதன் திறனை, "வெந்தணல் வேகமுன் வேகமே" என வியக்கிறார். மின்னல் வேகத்தில் செய்திகளை மின்னஞ்சல் (Email) வழியாகச் சேர்க்கும் அதன் ஆற்றலை "தகவல் தந்திடும் தன்மை" என்று வர்ணிக்கிறார். கணினியைத் தாக்கும் வைரஸ்களை ஒரு போர்வீரன் போல எதிர்கொண்டு தகவல்களைக் காக்கும் அதன் "பாதுகாப்பு அழகியலை" ஆசிரியர் போற்றுகிறார்.

ஈ) உலகளாவிய தொடர்பு அழகியல்

உலகையே ஒரு சிறிய பெட்டிக்குள் (கணினி) அடக்கியிருப்பதை ஆசிரியர் வியக்கிறார். இணையதளங்கள் (Websites) மற்றும் முகநூல் (Facebook) வழியாக உலக மனிதர்களை ஒன்றிணைக்கும் கணினியின் செயல்பாட்டை, "உலகமே உன்னுள்ளே" என்ற கருத்தாக்கத்தின் மூலம் ஒரு சமூக அழகியலாக (Social Aesthetics) மாற்றியுள்ளார்.

"அருமைப் பதிவழியா அன்பே - பெருமைசேர்
ஐந்தாம் தலைமுறையாய் ஆனாய் "

என்ற வரிகள் கணினி அடைந்துள்ள முதிர்ச்சியையும், அது மனித குலத்திற்கு வழங்கும் சேவையையும் அழகியல் பூர்வமாக உணர்த்துகின்றன.

தலைவியின் பாதாதி கேச வர்ணனை (அழகியல் உச்சம்)

தூது இலக்கியங்களின் மரபுவழிப்பட்ட மிக முக்கியமான அழகியல் கூறு 'பாதாதி கேசம்' (பாதம் முதல் தலை முடி வரை) வர்ணிப்பதாகும். மசிவன் கவி தனது 'கணினிவிடு தூது' நூலில், காதலியின் இயற்கை அழகை மரபார்ந்த உவமைகளோடும், நவீனக் காலச் சூழலோடும் இணைத்து ஒரு 'அழகியல் உச்சத்தை' (Aesthetic Peak) எட்டியுள்ளார்.

அ) கூந்தல் மற்றும் நெற்றி அழகியல்

தலைவியின் கூந்தல் இருளைப் பழிக்கும் கரிய நிறம் கொண்டது என்பதை ஆசிரியர் மேகத்தோடு ஒப்பிடுகிறார்.

"கார்போன்ற கூந்தல் கரியதே" *என்று குறிப்பிடுவதன் மூலம், மழையைத் தரும் மேகம் போன்ற மென்மையும் அடர்த்தியும் அவளது கூந்தலுக்கு உண்டு என்கிறார். அவளது நெற்றியைப் பிறை நிலவிற்கு ஒப்பிட்டு, அது அறிவின் ஒளியையும் அழகின் தெளிவையும் ஒருசேரப் பிரதிபலிப்பதாகக் காட்டுகிறார்.*

ஆ) கண் மற்றும் பார்வை அழகியல்

கண்களைப் பற்றிப் பாடும்போது, அவை வெறும் உறுப்புகள் அல்ல; அவை காண்பவரைத் தன்பால் ஈர்க்கும் காந்தங்கள் என்கிறார்.

"காந்தக் கண்களால் கவர்பவள்" என்ற வர்ணனை, அவளது பார்வையில் உள்ள வசீகரத்தைக் குறிக்கிறது. இது பார்ப்பவரின் மனதைச் சலனப்படுத்தும் ஒரு வகை 'இயக்க அழகியல்' (Kinetic Aesthetics) ஆகும். அவளது கண்கள் மீனைப் போன்ற வடிவம் கொண்டவை (கயல்விழி) என்றும், அவை பேசாத மொழிகளைப் பேசும் வல்லமை கொண்டவை என்றும் புகழ்கிறார்.

இ) இதழ் மற்றும் மழலை மொழி

இதழ்களின் அழகைச் சிவந்த பவளத்திற்கும், கோவக்கனிக்கும் ஒப்பிடுவது தமிழ் மரபு. மசிவன் கவி இதில் ஒரு படி மேலே சென்று, அவளது பேச்சில் உள்ள அழகைச் சுவைக்கிறார். அவளது இதழ்களிலிருந்து வெளிப்படும் சொற்கள் அமுதம் போன்றது என்கிறார். "மழலை மொழிக்கு முன்னால் கிளி குமுறும்" என்ற வர்ணனை, அவளது குரல் இனிமையின் முன் இயற்கையின் அழகிய குரலான கிளியின் குரலே தோற்றுப்போகும் என்பதைக் காட்டுகிறது.

ஈ) முகப் பொலிவு மற்றும் மின்னல் இடை

தலைவியின் முகத்தை ஒரு முழு நிலவாகவும், அதே சமயம் கணினியின் ஒளிமிக்க திரையாகவும் (Monitor) உருவகிக்கிறார். "மஞ்சள் முகஅழகை மற்றோர் உரைப்பாரோ" - தமிழ்ப் பண்பாட்டின் அடையாளமான மஞ்சள் பூசிய முகத்தின் புனிதமான அழகை இங்கே போற்றுகிறார். மின்னலைப் போன்ற மெல்லிய இடையைக் கொண்டவள் என்று வர்ணிப்பதன் மூலம், அவளது தோற்றத்தின் நளினத்தை (Grace) உறுதிப்படுத்துகிறார்.

உ) மெய்ப்பாட்டு அழகியல் (Emotional Aesthetics)

அவளது உடல் அழகு மட்டுமன்றி, அவளது குணமும் அழகானது என்கிறார். அவள் அன்பினால் உலகை ஆள்பவள். ஔவையின் நெல்லிக்கனியை உண்டவளைப் போலத் தமிழ் மீது பற்றுக் கொண்டவள். இன்றைய தலைவி முகநூல் (Facebook) வழியாகவும் தன் அழகையும் அறிவையும் வெளிப்படுத்துபவள் என்ற நவீன அழகியலை ஆசிரியர் இங்குத் தொட்டுச் செல்கிறார்.

"பாதாதி கேசம் வரைபாடக் கீதமாய் வந்தவர்க்கு வாழ்வளிக்கும் வள்ளலே" என்ற வரிகள் மூலம், தலைவியின் ஒவ்வொரு உறுப்பையும் பாடுவது ஒரு தெய்வீகமான கீதத்தைப் பாடுவதற்கு இணையானது என்பதை ஆசிரியர் உணர்த்துகிறார். இத்தகைய வர்ணனைகள் வாசகரின் மனக்கண்ணில் ஒரு முழுமையான ஓவியத்தைத் தீட்டுகின்றன, இதுவே இந்நூலின் அழகியல் உச்சமாகும்.

பிற தூதுப் பொருட்களும் கணினியும்: ஓர் ஒப்பீடு

தூது இலக்கிய மரபில் முன்னோர் பயன்படுத்திய தூதுப் பொருட்களை விட, நவீனக் காலத்தில் 'கணினி' எவ்வாறு சிறந்தது என்பதை ஆசிரியர் தர்க்கரீதியான அழகியலுடன் (Logical Aesthetics) ஒப்பிடுகிறார். பழமையான தூதுப் பொருட்களில் உள்ள நடைமுறைச் சிக்கல்களைச் சுட்டிக்காட்டி, கணினியின் மேன்மையை நிலைநாட்டும் பகுதி இதுவாகும்.

அ) இயற்கைச் சக்திகளுடன் ஒப்பீடு

மேகம்

பழைய இலக்கியங்களில் மேகத்தைத் தூது விடுவார்கள். ஆனால், மசிவன் கவி, மேகம் சென்றால் அது மழையாகப் பொழிந்து தாகத்தைத் தான் தீர்க்கும், செய்தியைச் சரியாகச் சேர்க்காது என்கிறார்.

தென்றல்

தென்றலைத் தூது அனுப்பினால், அது காதலில் வாடும் தலைவனுக்குத் தீயாகக் கொதிக்கும் ("தென்றல் வரும்போது தீயாகக் கொதிக்கும்") என்று அதன் போதாமையைக் குறிப்பிடுகிறார்.

ஆ) பறவைகளுடன் ஒப்பீடு

கிளி

கிளியைத் தூது அனுப்பினால், தலைவியின் கொஞ்சு மொழியைக் கேட்டு அது திகைத்துத் தன் குரலை மறந்து குமுறும் என்று நயமாகக் கூறுகிறார்.

அன்னம்

அன்னப் பறவையை அனுப்பினால், தலைவியின் நடை அழகையும் கன்னத்தின் அழகையும் கண்டு அது பொறாமைப்பட்டுத் தூது செல்ல மறுக்கும் என்று ஒப்பிடுகிறார்.

இ) உயர்திணைப் பொருட்களுடன் ஒப்பீடு

தோழன் / சகி

மனிதர்களைத் தூது அனுப்பினால் அவர்களுக்குள் வஞ்சகம் பிறக்கலாம் அல்லது செய்தியை மாற்றிக் கூறலாம். ஆனால் கணினி, கொடுத்த செய்தியை அப்படியே ("உண்மை மாறாமல்") கொண்டு சேர்க்கும் நம்பகத்தன்மை உடையது என்கிறார்.

ஈ) கணினியின் தனித்துவ அழகியல் (ஏன் கணினி சிறந்தது?)

மற்ற தூதுப் பொருட்கள் இலக்கை அடையக் காலதாமதம் ஆகும். ஆனால் கணினி, மின்னஞ்சல் (Email) வழியாகச் சொடுக்கிய நொடியில் செய்தியைச் சேர்க்கும் வல்லமை கொண்டது. கணினி பொய் சொல்லாது; பிழை செய்யாது. "அசதி இல்லா ஆற்றல்" கொண்டதாக அதைச் சித்தரிக்கிறார். கடல் கடந்து இருந்தாலும், வான் கடந்து இருந்தாலும் கணினி அத்தனையையும் நொடியில் கடந்து செல்லும்.

உ) ஆசிரியரின் முடிவு

மற்ற தூதுப் பொருட்கள் எல்லாம் ஏதோ ஒரு வகையில் குறையுடையவை அல்லது காலத்திற்கு ஒவ்வாதவை. ஆனால், "சகலமும் அறிந்த சகியே" என்று கணினியை விளிப்பதன் மூலம், அது ஒரு தோழனைப் போலவும், அறிவியலின் உச்சமாகவும் இருந்து காதலைச் சேர்க்கும் மிகச்சிறந்த கருவி என்பதை ஆசிரியர் அழகியல் நயத்துடன் நிறுவுகிறார்.

"மின்னஞ்சல் வழியே நீ விரைந்து சென்றால் –
என் அன்னத்தைக் கண்டுநீ ஆவல் சொல்வாய்!"

என்ற வரிகள், பழைய 'அன்னம்' என்ற தூதுப் பொருளை ஒரு நவீனக் 'கணினி' சந்தித்துச் செய்தி சொல்வது போன்ற ஒரு வியக்கத்தக்க கற்பனை அழகியலை (Creative Aesthetics) வெளிப்படுத்துகின்றன. இது பழமைக்கும் புதுமைக்கும் இடையிலான அழகான ஒப்பீடாகும்.

மொழி மற்றும் இலக்கண அழகியல்

மசிவன் தனது 'கணினிவிடு தூது' நூலில், நவீனத் தொழில்நுட்பத்தைப் பாடினாலும் அதன் அடிப்படைத் தளமாகத் தமிழ் மொழியின் இலக்கணச் செறிவையே கையாண்டுள்ளார். ஒரு கணினியின் இயக்கம் எவ்வாறு துல்லியமான குறியீடுகளை (Codes) அடிப்படையாகக் கொண்டதோ, அதேபோல் தமிழ் மொழியின் இலக்கணக் கட்டமைப்பும் துல்லியமானது என்பதை ஆசிரியர் அழகியல் நயத்துடன் வெளிப்படுத்துகிறார்.

அ) தொல்காப்பியக் கோட்பாடுகளின் தாக்கம்

நூலாசிரியர் தமிழின் ஆதி இலக்கண நூலான தொல்காப்பியத்தை மிக உயரிய இடத்தில் வைத்துப் போற்றுகிறார். தலைவியின் அறிவாற்றலையும் புகழையும் விவரிக்கும் போது, தொல்காப்பியத்தின் மூன்று பெரும் பிரிவுகளை (எழுத்து, சொல், பொருள்) ஒருங்கே இணைக்கிறார்.

கணினியில் நாம் உள்ளீடு செய்யும் தரவுகள் (Data) எவ்வாறு எழுத்துக்களாகவும் சொற்களாகவும் மாறுகின்றனவோ, அதேபோல் தலைவியின் அழகும் அறிவும் முறையான இலக்கணத்தோடு திகழ்கிறது என்கிறார். தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் கூறப்பட்டுள்ள மெய்ப்பாடுகள் (Emotions) தலைவியின் முகத்தில் பிரதிபலிப்பதைக் கவிஞர் நுட்பமாகச் சித்தரிக்கிறார்.

ஆ) மரபுசார்ந்த செய்யுள் நயம்

கணினிவிடு தூது, சிற்றிலக்கிய மரபுக்கே உரிய 'கண்ணி' வகைச் செய்யுள்களால் ஆனது. பாடல்களில் எதுகை (இரண்டாம் எழுத்து ஒன்றி வருதல்) மற்றும் மோனை (முதல் எழுத்து ஒன்றி வருதல்) நயங்கள் மிகச் சிறப்பாக அமைந்துள்ளன. "அன்பே உனையன்றி ஓரணுவும் உய்யாத ஆற்றல்" "தன்னைப் படைக்கத் தருமந்தான் வேண்டுமே" இத்தகைய ஓசை நயங்கள், ஒரு இயந்திரத்தைப் பற்றிய பாடலையும் மென்மையான கவிதை உணர்வுடன் வாசகரிடம் கொண்டு சேர்க்கின்றன.

இ) திருக்குறள் மற்றும் நீதி இலக்கியச் செல்வாக்கு

ஆசிரியர் தனது பாடல்களில் ஆங்காங்கே திருக்குறள் கருத்துக்களைத் தூவிச் செல்கிறார். தலைவியின் புகழைப் பாடும்போது வள்ளுவத்தின் "புகழுடைமை" அதிகாரத்தின் சாரத்தைப் பயன்படுத்துகிறார். கணினிக்குத் தூது சொல்லும் போது, அது "உண்மை மாறாமல்" (Accuracy) செயல்பட வேண்டும் என்று கூறுவது, இலக்கியங்களில் கூறப்படும் 'தூதுவனின்' அறப்பண்பை வலியுறுத்துகிறது.

ஈ) சொல்லாடல் அழகியல் (Lexical Aesthetics)

கணினித் தமிழ் சொற்களைக் கையாளுவதில் ஆசிரியர் தனித்திறனை வெளிப்படுத்துகிறார். மென்பொருள், வன்பொருள், இணையம் போன்ற சொற்களைச் செய்யுள் நடையில் இயல்பாகப் பொருத்தியுள்ளார். தமிழின் உயிர் எழுத்துக்களையும் மெய் எழுத்துக்களையும் கணினியின் இயக்கத்தோடு ஒப்பிட்டுப் பாடுவது, மொழியையே ஒரு மென்பொருளாகக் காணும் நவீன அழகியல் பார்வையைத் தருகிறது.

உ) இலக்கணமே ஓர் அழகு

ஆசிரியர் வேற்றுமை உருபுகள், வினையெச்சம், பெயரெச்சம் ஆகிய இலக்கணக் கூறுகளைத் தலைவியின் செயல்களோடும், கணினியின் வேகத்தோடும் பிணைக்கிறார். இலக்கணம் என்பது ஒரு மொழியின் கட்டுக்கோப்பு. கணினி என்பது ஒரு செயலின் கட்டுக்கோப்பு. இந்த இரண்டையும் இணைப்பதன் மூலம், "இலக்கணமே ஓர் அழகியல் வடிவம்" *(Grammar as an Aesthetic Form)* என்பதை ஆசிரியர் நிரூபித்துள்ளார்.

"எந்நாவில் வந்தமரும் எங்கும் புகழ்பரப்ப - உன்னாவி சேர்ந்தால் உயர்வு" என்ற வரிகள், தமிழ் மொழியின் உயிரோட்டம் ஒரு கவிஞனுக்குள் புகுந்தால், அது கணினி போன்ற நவீனப் பொருட்களையும் மிகச்சிறந்த இலக்கியமாக மாற்றும் என்ற மொழியியல் அழகியலை உணர்த்துகின்றன.

முடிவுரை

மசிவன் கவியின் ‘கணினிவிடு தூது’ என்னும் ஆய்வுக்கட்டுரையின் இறுதிப் பகுதியாக அமைவது இம்முடிவுரை. ஒரு இயந்திரத்தை இலக்கியப் பொருளாக மாற்றி, அதற்கு உணர்வுகளையும் மொழியையும் ஊட்டிய ஆசிரியரின் ஆளுமையை இது தொகுத்துரைக்கிறது. இவ்வாய்வின் மூலம், மரபுவழிப்பட்ட சிற்றிலக்கிய வடிவமான 'தூது', நவீனக் காலத்திற்கேற்ப எவ்வாறு உருமாற்றம் பெற்றுள்ளது என்பதை அறிய முடிகிறது. அன்னமும் மேகமும் செய்த வேலையை, இன்று ஒரு மின்னணுப் பெட்டி (கணினி) செவ்வனே செய்கிறது என்பதை ஆசிரியர் நிறுவியுள்ளார். இது தமிழ் இலக்கியத்தின் காலத்திற்கேற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்ளும் 'நெகிழ்வுத் தன்மைக்கு' ஒரு சிறந்த சான்றாகும். பெண்ணின் பாதாதி கேச அழகை வர்ணிப்பதில் காட்டிய அதே தீவிரத்தை, கணினியின் பரிணாம வளர்ச்சியை விவரிப்பதிலும் ஆசிரியர் காட்டியுள்ளார். இயந்திரத் தொழில்நுட்பத்தைத் தமிழுணர்வோடு பிணைத்திருப்பது, இலக்கிய உலகில் ஒரு புதிய 'தொழில்நுட்ப அழகியல்' *(Technological Aesthetics)* கோட்பாட்டை உருவாக்கியுள்ளது.

கணினி என்பது வெறும் கணக்கிடும் கருவி மட்டுமல்ல, அது காதலையும் கருத்தையும் இணைக்கும் ஒரு சமூக ஊடகம் என்பதை இந்நூல் பறைசாற்றுகிறது. முகநூல், மின்னஞ்சல் போன்ற நவீனக் கூறுகள் இலக்கியத்திற்குள் நுழையும்போது, அவை சமகால வாழ்வியலின் உண்மையான ஆவணங்களாக மாறுகின்றன. இந்நூல், கணினித் தமிழை வளர்ப்பதோடு, இளைஞர்களுக்கு இலக்கியத்தின் மீது ஆர்வத்தை ஏற்படுத்துகிறது. மரபுக் கவிதைகள் நவீனப் பொருள்களைப் பாடுவதற்கு எத்தகைய வாய்ப்புகளைக் கொண்டுள்ளன என்பதை இக்கட்டுரை விளக்குகிறது. இலக்கணச் செறிவும், நவீனச் சிந்தனையும் ஒருங்கே அமையப் பெற்ற மசிவன் கவியின் படைப்புத் திறன் இவ்வாய்வின் வழி வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

'கணினிவிடு தூது' என்பது வெறும் கவிதை நூல் மட்டுமல்ல; அது அறிவியலுக்கும் தமிழுக்கும் இடையிலான ஒரு தீராத காதல். "எந்நாவிலும் வந்தமரும் எங்கும் புகழ்பரப்ப" என்ற ஆசிரியரின் வரிகளுக்கேற்ப, கணினி வழி தமிழின் பெருமையை உலகறியச் செய்யும் ஒரு உன்னத அழகியல் படைப்பாக இது திகழ்கிறது.

துணைநூற்பட்டியல்

1. மசிவன் (2016). கணினிவிடு தூது (முதல் பதிப்பு). மசிவன் பதிப்பகம், எண் 3/199, ஆ.கூடலூர், ஆயந்தூர், கண்டாச்சிபுரம், விழுப்புரம் - 605755 தமிழ்நாடு, இந்தியா.

2. தொல்காப்பியர். (2003). தொல்காப்பியம் - பொருளதிகாரம் (இளம்பூரணர் உரையுடன்). திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் (லிமிடெட்), எண் 154, அண்ணா சாலை, சென்னை – 600002, தமிழ்நாடு, இந்தியா.

3. திருவள்ளுவர். (2000). திருக்குறள் (பரிமேலழகர் உரையுடன்). பூம்புகார் பதிப்பகம், எண் 15, பிரகாசம் சாலை, மண்ணடி, சென்னை – 600108, தமிழ்நாடு, இந்தியா.

4. கடிகாசலம், ந. (2004). தமிழ் இலக்கியங்களில் தூது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சி.பி.டி. வளாகம், தரமணி, சென்னை – 600113, தமிழ்நாடு, இந்தியா.

5. வரதராசனார், மு. (2008). தமிழ் இலக்கிய வரலாறு (24-ஆம் பதிப்பு). சாகித்திய அகாதெமி, இரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை, புது தில்லி – 110001, இந்தியா.

References

1. *Masivan, (2016). Kaninividu Thoodu (1st ed.) Masivan Pathippagam, 3/199 A.Gudalur, Ayandur, Kandapuram, Villupuram - 605755, Tamil Nadu, India.*

2. *Tolkappiyar. (2003). Tolkappiyam - Porulathikaram (With Ilampooranar Commentary). The South India Saiva Siddhan-ta Works Publishing Society (Limited), No. 154, Anna Salai, Chennai – 600002, Tamil Nadu, India.*

3. *Thiruvalluvar. (2000). Thirukkural (With Parimelalhagar Commentary). Poompuhar Pathippagam, No. 15, Prakasam Salai, Mannady, Chennai – 600108, Tamil Nadu, India.*

4. *Kadikasalam, N. (2004). Tamil Ilakkiyangalil Thoodu (Messenger Genres in Tamil Literature). International Institute of Tamil Studies (IITS), CPT Campus, Taramani, Chennai – 600113, Tamil Nadu, India.*

5. *Varadarajan, M. (2008). A History of Tamil Literature (24th ed.). Sahitya Akademi, Rabindra Bhavan, 35, Ferozeshah Road, New Delhi – 110001, India.*

Cite this Article in English

Varalakshmi.R “**Principles of Aesthetics in Kaninividu thothu**” *MASIVAN : JOURNAL OF LANGUAGE AND LITERATURE STUDIES, ISSN: 3048-7854, Vol.3 Issue 2, July 2026, pp. 63-70*